தினபூமி
thinaboomi.com
பூமி: 26 சுற்று: 141 ஐப்பசி 15
Regd. No.TN/WR/SLM(E)/14/2017-2019 RNI Regn. No. TNTAM/2001/4003
சேலம், சனி, நவம்பர் 01, 2025 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி பக்கம் 8 ₹ 3.00



**இந்தியா-அமெரிக்கா இடையே முக்கிய பாதுகாப்பு ஒப்பந்தம்: ராஜ்நாத் சிங் கையெழுத்து**
....2-ம் பக்கம்

**முழு காஷ்மீரும் இந்தியாவுடன் இணைவதை அனுமதிக்கவில்லை: நேரு குறித்து பிரதமர் மோடி பேச்சு**
...3-ம் பக்கம்

**ஒருநாள் போட்டியில் அதிகபட்ச ஸ்கோரை சேஸிங் செய்த அணி: இந்திய மகளிர் அணி சாதனை**
....6-ம் பக்கம்






● சென்னை தலைமைச்செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் நேற்று தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமெரிக்க நாட்டை சேர்ந்த போர்டு நிறுவனத்தால் ரூ.3,250 கோடி முதலீட்டில் 600 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் செங்கல்பட்டு மறைமலை நகரில் அடுத்த தலைமுறை வாகன இன்ஜின் உற்பத்தி செய்வதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

### செங்கல்பட்டு மறைமலை நகரில் அமைகிறது:

# ரூ.3,250 கோடி முதலீட்டில் வாகன என்ஜின் உற்பத்தி

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ‘போர்டு’ நிறுவனம் ஒப்பந்தம் கையெழுத்து

சென்னை, நவ. 01-

**அமெரிக்க பயணத்தின் போது போர்டு நிறுவனம் உறுதியளித்தபடி ரூ.3,250 கோடி முதலீட்டில் புதிதாக 600 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், மறைமலை நகரில் அடுத்த தலைமுறை வாகன என்ஜின் உற்பத்தி மேற்கொள்வதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

**அடுத்த தலைமுறை....**

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:- முதல்வர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் நேற்று (31.10.2025) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அமெரிக்க நாட்டைச் சேர்ந்த போர்டு நிறுவனத்தால் ரூ.3,250 கோடி முதலீட்டில் 600 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், செங்கல்பட்டு மாவட்டம், மறைமலை நகரில், அடுத்த தலைமுறை வாகன என்ஜின் உற்பத்தி செய்வதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

**ஆய்வறிக்கையில்....**

தமிழ்நாடு, இந்தியாவிலேயே 2-வது பெரிய பொருளாதாரமாகவும், பல்வேறு துறைகளில் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் முன்னணி மாநிலமாகவும் விளங்கி வருகிறது. முதலீடுகளை ஈர்ப்பதிலும், அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை, குறிப்பாக பெண்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்படுவதாக, 2024-25ம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையில் புகழாரம் சூட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**சிறப்பான முன்னெடுப்பு...**

தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், 2030க்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு வளர்ச்சி பெறுவதற்கும், தேவையான முதலீடுகளை ஈர்ப்பதற்கும் தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளை மேற்கொண்டுவருகிறது. அந்த வகையில், கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம், அமெரிக்காவிற்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்ட முதல்வர், போர்டு நிறுவனத்தின் உயர் அதிகாரிகளைச் சந்தித்து, தமிழ்நாட்டில் மீண்டும் செயல்பாடுகளைத் தொடங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

**புதிதாக 600 நபர்களுக்கு...**

அப்போது போர்டு நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் உறுதியளித்தபடி, போர்டு நிறுவனம், ரூ.3,250 கோடி முதலீட்டில் புதிதாக 600 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், வாகன என்ஜின் உற்பத்தித் திட்டத்தை மீண்டும் தொடங்க உள்ளது. அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்றைய தினம், முதல்வர் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழர்கள் மீதான வன்மத்தை தேர்தல் அரசியலுக்காக வெளிப்படுத்துவதா?

## பிரதமரின் பேச்சுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்

சென்னை, நவ. 01-

**பீகாரில் தேர்தல் பிரச்சாரத்தின் போது பேசிய பிரதமர் மோடி, "தமிழ்நாட்டில் தி.மு.க.வினர் பீகாரைச் சேர்ந்த உழைக்கும் மக்களை துன்புறுத்துகின்றனர் என்று கூறியிருந்தார். இந்த நிலையில் பிரதமரின் இந்த பேச்சுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

**வேதனையுடன்...**

இதுதொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:- இந்த நாட்டிலுள்ள அனைவருக்குமான மாண்புமிகு பிரதமர் பொறுப்பில் இருக்கிறோம் என்பதையே நரேந்திர மோடி அடிக்கடி மறந்து, இது போன்ற பேச்சுகளால் தன்னுடைய பொறுப்புக்குரிய மாண்பை இழந்துவிடக்கூடாது என்று ஒரு தமிழனாக வேதனையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**கடும் கண்டனம்...**

ஒடிசா - பீகார் என்று எங்கு சென்றாலும், பா.ஜ.க.வினர் தமிழர்களின் மீதான வன்மத்தைத் தேர்தல் அரசியலுக்காக வெளிப்படுத்துவதற்குத் தமிழ்நாட்டு மக்களின் முதல்வர் என்ற முறையில் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். பன்முகத்தன்மை கொண்ட, வேற்றுமையில் ஒற்றுமையைக் காணும் பெருமைமிக்க இந்தியாவில், இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் பகையை வளர்ப்பது, தமிழர்களுக்கும் பீகார் மக்களுக்கும் பகை உண்டாக்கும்படி நடந்து கொள்வது போன்ற அற்ப அரசியல் செயல்பாடுகளை நிறுத்திவிட்டு, நாட்டின் நலன் மீது பிரதமரும் பா.ஜ.க.வினரும் கவனம் செலுத்த வேண்டும் என வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

### 1 கோடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு:

# பீகாரில் தே.ஜ. கூட்டணியின் தேர்தல் அறிக்கை வெளியீடு




**சட்டசபை தேர்தல் முக்கிய வாக்குறுதிகள்:**

1) ஒரு கோடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
2) பீகாரின் ஒவ்வொரு மாவட்டத்திலும் திறன் பயிற்சி மையங்கள்.
3) பெண்கள் வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் ரூ.2 லட்சம் நிதியுதவி.
4) ஏழை மாணவர்களுக்கு கே.ஜி. முதல் பி.ஜி. வரை இலவச கல்வி.
5) விவசாயிகளுக்கு நிதியுதவி ரூ.6,000-த்தில் இருந்து ரூ.9,000 ஆக உயர்வு.
6) பீகார் பள்ளிகளில் மதிய உணவுடன் காலை உணவும் வழங்கப்படும்.
7) உயர்கல்வி பயிலும் பட்டியலின மாணவர்களுக்கு மாதம் ரூ.2,000.
8) 4 நகரங்களில் மெட்ரோ ரெயில் சேவைகள் தொடங்கப்படும்.
9) பீகாரில் ஏழு சர்வதேச விமான நிலையங்கள் அமைக்கப்படும்.
10) இலவச ரேஷன், 125 யூனிட் இலவச மின்சாரம்.
11) மீனவர்களுக்கான உதவி ரூ.4,500 லிருந்து ரூ.9,000 ஆக உயர்வு.
12) 2எய்ம்ஸ் மருத்துவமனையில் ஐ.ஐ.டி.யும் அமைக்கப்படும்.

பாட்னா, நவ. 01-

**பீகார் தேர்தலுக்கான பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியின் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதில் ஒரு கோடி இளைஞர்களுக்கு அரசு வேலை, விவசாயிகளுக்கு ரூ.9 ஆயிரம் நிதியுதவி உள்ளிட்ட வாக்குறுதிகள் இடம்பெற்றுள்ளது.**

243 தொகுதிகளை கொண்ட பீகார் மாநில சட்டசபைக்கு 2 கட்டங்களாக அடுத்த மாதம் 6 மற்றும் 11-ம் தேதிகளில் வாக்குப்பதிவு நடைபெறுகிறது. வாக்கு எண்ணிக்கை நவம்பர் 14-ம் தேதி நடைபெற உள்ளது. பீகாரில் நிதிஷ்குமார் தலைமையில் ஐக்கிய ஜனதா தளம் - பா.ஜ.க. கூட்டணி ஆட்சி நடைபெற்று இருக்கிறது. ஆட்சியை தக்க வைத்து கொள்ளும் ஆர்வத்தில் ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணி தீவிர களப்பணியாற்றி வருகிறது.

நிதிஷ் குமாரிடம் இருந்து ஆட்சியை இந்த முறை கைப்பற்றி விட வேண்டும் என்ற வேட்கையில் எதிர்க்கட்சியான தேஜஸ்வி யாதவின் ஆர்.ஜே.டி. (ராஷ்ட்ரிய ஜனதா தளம்) - காங்கிரசின் மகா பந்தன் கூட்டணி இருக்கிறது.

கடந்த 28-ம் தேதி எதிர்க்கட்சிகள் அடங்கிய ‘இன்டியா’ கூட்டணியின் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டது. ‘பீகாருக்கு தேஜஸ்வியின் உறுதிமொழிகள்’ என்ற தலைப்பில் தேர்தல் அறிக்கையை கூட்டணி கட்சிகளின் முக்கிய தலைவர்கள் அனைவரும் இணைந்து வெளியிட்டனர்.

இந்த நிலையில் பீகார் தேர்தலுக்கான பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியின் தேர்தல் அறிக்கை நேற்று வெளியிடப்பட்டுள்ளது. பீகார் முதல்வர் நிதிஷ்குமார், துணை முதல்வர் சாம்ராட் சவுத்ரி, பா.ஜ.க. தலைவர் ஜே.பி. நட்டா மற்றும் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் இணைந்து 69 பக்க தேர்தல் அறிக்கையை வெளியிட்டனர்.

### தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட

# 9 மசோதாக்களுக்கு கவர்னர் ஒப்புதல்

சென்னை, நவ. 01-

**சிறு குற்றங்களுக்கு சிறை தண்டனைக்கு பதிலாக அபராதம் விதிக்கும் மசோதா உள்ளிட்ட தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட 9 மசோதாக்களுக்கு கவர்னர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்துள்ளார்.**

தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட 9 மசோதாக்களுக்கு கவர்னர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்துள்ளார். முன்னாள் எம்.எல்.ஏ.க்களுக்கு ஓய்வூதியத்தை உயர்த்துவது, சிறு குற்றங்களுக்கு சிறை தண்டனைக்கு பதிலாக அபராதம் விதிக்கும் மசோதா உள்பட 9 மசோதாக்களுக்கு கவர்னர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்துள்ளார்.

அதேபோல், 2வது முறை நிறைவேற்றப்பட்ட தமிழக நிதி நிர்வாக பொறுப்புடைமை மசோதாவுக்கும் ஒப்புதல் அளித்துள்ளார். மசோதாக்களுக்கு கவர்னர் ஒப்புதல் அளித்துள்ள நிலையில் இவை அரசு நாளிதழில் வெளியிடப்பட்டு பின்னர் சட்டமாக அமலுக்கு வர உள்ளது.

# ஆதார், ஜி.எஸ்.டி. நடைமுறையில் புதிய மாற்றம் இன்று முதல் அமல்

மும்பை, நவ. 01-

**இன்று முதல் வங்கி வாடிக்கையாளர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் டிஜிட்டல் பரிவர்த்தனைப் பயனர்களுக்கு பல முக்கியமான நிதி விதிகள் மாற்றங்கள் நடைமுறைக்கு வர உள்ளன. இதில் புதிய வங்கிக் காப்பாளர் விதிகள், ஆதார் புதுப்பித்தலில் எளிமை, எஸ்.பி.ஐ கிரெடிட் கார்டு கட்டணங்கள், என்.பி.எஸ்-ஐ யு.பி.எஸ்-க்கு மாற்றும் காலக்கெடு நீட்டிப்பு, மற்றும் எளிமையாக்கப்பட்ட ஜி.எஸ்.டி பதிவு முறை ஆகியவை அடங்கும்.**

இன்று முதல், வங்கி வாடிக்கையாளர்கள் ஒரு கணக்கு, லாக்கர் அல்லது பாதுகாப்பு காப்பகப் பொருளுக்கு 4 நபர்கள் வரை காப்பாளர்களாக நியமிக்க முடியும். இந்த நடவடிக்கை அவசர காலங்களில் குடும்பங்களுக்கான நிதி அணுகலை எளிதாக்குவதையும், உரிமை தொடர்பாக எழும் சட்டப் பிரச்சனைகளைக் குறைக்க கொண்டு வரப்படுகிறது. மேலும் காப்பாளர்களைச் சேர்ப்பது அல்லது மாற்றுவது போன்ற நடைமுறையும் எளிமையாக்கப்பட்டுள்ளது.

எஸ்.பி.ஐ கிரெடிட் கார்டு மற்றும் கட்டண அமைப்புகளிலும் மாற்றங்கள் காணப்பட உள்ளன. கல்வி தொடர்பான பரிவர்த்தனைகள் மற்றும் ரூ.1,000-க்கு அதிகமாகச் செய்யப்படும் மூன்றாம் தரப்பு கட்டண செயலிகள் மற்றும் வாலெட் டாப்-அப்களுக்கான பரிவர்த்தனைகளுக்கு இனி 1 சதவீத கட்டணம் விதிக்கப்படும்.

இந்தியத் தனித்துவ அடையாள ஆணையம், ஆதார் புதுப்பித்தல் செயல்முறையை எளிதாக்க உள்ளது. இதன் மூலம் ஆவணங்களைப் பதிவேற்றாமல் பெயர், முகவரி, பிறந்த தேதி மற்றும் மொபைல் எண் போன்ற விவரங்களை ஆன்லைனிலேயே திருத்த முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் கைரேகைகள்
**(கடைசி பக்கம் பார்க்க)**

# வாக்காளர்கள் சிறப்பு திருத்தம் குறித்து அச்சம் உள்ளது: அமைச்சர் துரைமுருகன்

வேலூர், நவ. 01-

**வாக்காளர்கள் சிறப்பு திருத்தத்தில் அச்சம் உள்ளது என்று அமைச்சர் துரைமுருகன் தெரிவித்துள்ளார்.**

தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வருகிற 3-ம் தேதி வேலூர் மாவட்டத்துக்கு வருகை தர உள்ளார். இதையொட்டி பல்வேறு ஏற்பாடுகள் மாவட்ட நிர்வாகம் சார்பிலும், கட்சியினர் சார்பிலும் செய்யப்பட்டு வருகிறது. அவர் 4-ம் தேதி வேலூர் கோட்டை மைதானத்தில் சுமார் 15 ஆயிரம் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க உள்ளார். இதற்காக அங்கு விழா மேடை அமைப்பது தொடர்பாக தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் ஆய்வு செய்தார்.

அப்போது அவர் கூறியதாவது:- மழைக்காலங்களில் அதிகப்படியான நீர் கடலுக்கு செல்கிறது. எனவே தமிழகத்தில் உள்ள ஆறுகளை புனரமைக்க பூகோலப்படி, சாத்தியமா என ஆய்வு செய்கிறோம். அவ்வாறு ஆய்வுக்கு பின்னர் நிதி வசதி இருந்தால் செய்யலாம். வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தத்தில் வடமாநில தொழிலாளர்கள் சேர்க்கப்படுவார்கள் என்ற கருத்து உள்ளது. இது ஆபத்து தான்.

ஒரே இடத்தில் 700 இஸ்லாமியர்கள் இருப்பார்கள் என்றால், அவர்களை வாக்காளர் சிறப்பு திருத்தத்தில் நீக்கி விட்டு அவர்களின் பெயரை சேர்த்து விடுவார்கள். வாக்காளர்கள் சிறப்பு திருத்தத்தில் அச்சம் உள்ளது. அதுதான் பிரச்சனையே. ஆண்டாண்டு காலமாக இங்கிருந்து வாக்களிப்பவர்களை இல்லையென்று ஆக்கிவிடுவார்கள். எந்த ரூபத்தில் வந்தாலும் அதனை எதிர்கொள்வோம். இவ்வாறு அவர் கூறினார்.


**மார்க்கெட் விலை நிலவரம்**

BSE -465.75 பாயின்ட் 83,938.71

NSE -155.75 பாயின்ட் 25,722.10



**தங்கம்** 1 சவரன் ₹90,400 1 கிராம் ₹11,300



**வெள்ளி** 1 கிலோ ₹165,000 1 கிராம் ₹165.00

**டாலர்** ₹88.75

**பெட்ரோல்** ₹100.75 டீசல் ₹92.34

# இந்தியா-அமெரிக்கா இடையே முக்கிய பாதுகாப்பு ஒப்பந்தம்

## அமைச்சர் ராஜ்நாத் சிங் கையெழுத்து

**டெல்லி, நவ. 01-**

இந்தியா- அமெரிக்கா இடையே 10 ஆண்டுக்கான பாதுகாப்பு ஒப்பந்தத்தை ராஜ்நாத் சிங் கையெழுத்திட்டார்.



மலேசியா கோலாலம்பூரில் 19-வது ஆசியான் பாதுகாப்பு அமைச்சர்கள் உச்சி மாநாடு இன்று (1-ந்தேதி) நடக்கிறது. அதற்கு முன்பாக மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் அமெரிக்க பாதுகாப்பு துறை அமைச்சர் பீட் ஹெக்செத் ஆகியோர் கோலாலம்பூரில் சந்தித்து இரு நாடுகளின் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து முக்கிய ஆலோசனை நடத்தினார்கள்.

இந்த சந்திப்பின்போது அமெரிக்கா- இந்தியா இடையே 10 ஆண்டு பாதுகாப்பு கட்டமைப்பில் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தில் அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் பீட் ஹெக்செத் மற்றும் மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆகியோர் கையெழுத்திட்டனர். இது தொடர்பாக பீட் ஹெக் செத் எக்ஸ் வலைதள பக்கத்தில் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது:-

இந்தியா- அமெரிக்கா இரு நாடுகளுக்கு இடையே ஒருங்கிணைப்பு, தகவல் பகிர்வு மற்றும் தொழில் நுட்ப ஒத்துழைப்பை மேம்படுத்துதல், பிராந்திய ஸ்திரத்தன்மை மற்றும் தடுப்புக்கான ஒரு மூலக்கல்லாக இந்த கட்டமைப்பு கருதப்படுகிறது. இந்த ஒப்பந்தம் இரு நாடுகளின் படைகளுக்கும் ஒரு முக்கியமான படிக்கல்லாகும். இது பாதுகாப்பு மற்றும் நமது வலுவான கூட்டாண்மைக்கான அமெரிக்காவின் நீண்ட கால உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டு காட்டுகிறது என தெரிவித்து உள்ளார்.

இது தொடர்பாக மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறும் போது, "இந்த கட்டமைப்பில் கையெழுத்திட்டது இந்தியா- அமெரிக்கா உறவுகளில் ஒரு புதிய அத்தியாயத்தை குறிக்கிறது. ஹெக் செத் தலைமையின் கீழ் உறவுகள் மேலும் வலுப்பெறும்" என தெரிவித்தார்.

# தங்கம் விலையில் மாற்றம் இல்லை

**சென்னை, நவ. 01-**

தங்கம் விலையில் நேற்று எந்த மாற்றமும் இன்றி விற்பனையானது. தங்கம் விலை ஒரு கிராம் ரூ.11,300-க்கும், ஒரு சவரன் ரூ.90,400-க்கும் விற்பனையானது. வெள்ளி விலையிலும் நேற்று எந்த மாற்றமும் இல்லை. வெள்ளி ஒரு கிராம் ரூ.165-க்கும், ஒரு கிலோ ரூ.1 லட்சத்து 65 ஆயிரத்துக்கும் விற்பனையானது.


தங்கம் விலை ஏற்றம் கண்டு, கடந்த 18-ம் தேதியில் இருந்து விலை குறையத் தொடங்கியது. கடந்த 28-ம் தேதி ஒரு சவரன் ரூ.89 ஆயிரத்துக்கு கீழ் வரை சென்றது. தொடர்ந்து விலை குறையும் என எதிர்பார்த்த நிலையில், கடந்த 3 நாட்களுக்கு முன் அதிரடியாக சவரனுக்கு ரூ.2 ஆயிரம் உயர்ந்து மிரட்டியது. தங்கம் விலை நேற்று முன்தினம் குறைந்தது. காலை விலை நிலவரப்படி, கிராமுக்கு ரூ.225-ம், சவரனுக்கு ரூ.1,800-ம் குறைந்த நிலையில், பின்னர் பிற்பகல் விலையில் கிராமுக்கு ரூ.200-ம், சவரனுக்கு ரூ.1,600-ம் உயர்ந்து காணப்பட்டது. இந்நிலையில் தங்கம் விலையில் நேற்று எந்த மாற்றமும் இன்றி விற்பனையானது. தங்கம் விலை ஒரு கிராம் ரூ.11,300-க்கும், ஒரு சவரன் ரூ.90,400-க்கும் விற்பனையானது. வெள்ளி விலையிலும் நேற்று எந்த மாற்றமும் இல்லை. வெள்ளி ஒரு கிராம் ரூ.165-க்கும், ஒரு கிலோ ரூ.1 லட்சத்து 65 ஆயிரத்துக்கும் விற்பனையானது.

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து உயர்வு

**மேட்டூர், நவ. 01-**

மேட்டூர் அணைக்கு நேற்று காலை முதல் வினாடிக்கு 12 ஆயிரத்து 500 கனஅடியாக அதிகரித்து வந்து கொண்டு இருக்கிறது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் நேற்று காலை நிலவரப்படி 120 அடியாக இருந்தது. அணைக்கு நேற்று முன்தினம் வினாடிக்கு 10 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருந்த நிலையில் அது நேற்று காலை முதல் வினாடிக்கு 12 ஆயிரத்து 500 கனஅடியாக அதிகரித்து வந்து கொண்டு இருக்கிறது. அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு வினாடிக்கு 12 ஆயிரம் கனஅடியும், கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்துக்கு வினாடிக்கு 500 கனஅடி தண்ணீரும் வெளியேற்றப்பட்டு வருகிறது. தற்போது அணையில் 93.47 டி.எம்.சி. தண்ணீர் இருப்பு உள்ளது.




**அமைச்சர் நாசர் நேற்று தலைமைச் செயலகத்தில், "அயலகத் தமிழர் தினம் 2026" விழாவில் கலந்து கொள்ள விரும்பும் அயலகத் தமிழர்கள் தங்களது விவரங்களை அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகத்தில் பதிவு செய்வதற்கான வலைதள பக்கத்தினை தொடங்கி வைத்தார்.**

# புதுச்சேரியில் பழைய மின் கட்டணமே தொடரும்: அமைச்சர் திட்டவட்டம்

**புதுச்சேரி, நவ. 01-**

புதுச்சேரியில் பழைய மின் கட்டணமே தொடரும் என்று அமைச்சர் நமச்சிவாயம் தெரிவித்துள்ளார்.

புதுவையில் மின்கட்டணம் திடீரென மீண்டும் உயர்த்தப்பட்டதாக நேற்று முன்தினம் அறிவிப்பு வெளியானது. விட்டு உபயோக கட்டணம் யூனிடுக்கு 20 பைசா உயர்த்தப்பட்டுள்ளதாகவும், இது 1-ந்தேதி முதல் நடைமுறைக்கு வரும் என்றும் தகவல் வெளியானதால் பொதுமக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இந்த நிலையில், புதுச்சேரியில் பழைய மின் கட்டணமே தொடரும் என மின்சாரத் துறை அமைச்சர் நமச்சிவாயம் நேற்று அறிவித்துள்ளார். இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், "மின் கட்டணம் நிச்சயமாக உயர்த்தப்படவில்லை. ஒரு யூனிட்டுக்கு 20 பைசா உயர்த்த வேண்டும் என ஜே.இ.ஆர்.சி. பரிந்துரை செய்துள்ளது.

ஏற்கனவே கடந்த ஆண்டு இதுபோல் ஒரு சூழ்நிலை வந்தபோது புதுச்சேரி அரசு அதனை ஏற்றுக்கொண்டு, அந்த தொகையை மானியமாக மக்களுக்கு வழங்கி வருகிறது. அதே போல் இந்த ஆண்டும் புதுச்சேரி அரசாங்கமே கட்டண உயர்வுக்கான மானியத்தை வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறது. எனவே, அதனை அரசாங்கமே செலுத்தும். இது பொதுமக்கள் மீது எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது. புதுச்சேரியில் பழைய மின் கட்டணமே தொடரும்" என்று தெரிவித்துள்ளார்.

# பாலஸ்தீனிய கைதிகள் 30 பேரின் உடல்களை ஒப்படைத்த இஸ்ரேல்

**காசா சிட்டி, நவ. 01-**

30 பாலஸ்தீனிய கைதிகளின் உடல்களை ஒப்படைத்தது இஸ்ரேல்.

காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் ஆயுதக் குழுவினர் கடந்த 2023ம் ஆண்டு அக்டோபர் 7ம் தேதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணய கைதிகளாக காசா முனைக்கு ஹமாஸ் கடத்தி சென்றது.

இதையடுத்து, ஹமாஸ் ஆயுதக்குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல் காசா முனையில் அதிரடி தாக்குதல் நடத்தியது. அதேவேளை, பணய கைதிகளில் பலரை ஒப்பந்த அடிப்படையிலும், ராணுவ நடவடிக்கை மூலமும் இஸ்ரேல் மீட்டது. 2 ஆண்டுகள் நடந்த போரில் காசாவில் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் உள்பட 68 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

அதேவேளை, அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப்பின் முயற்சியால் கடந்த 10ம் தேதி இஸ்ரேல் , ஹமாஸ் இடையே போர் நிறுத்தம் அமலுக்கு வந்தது. ஹமாஸ் தங்கள் வசம் உயிருடன் இருந்த 20 பணய கைதிகளை இஸ்ரேலிடம் ஒப்படைத்தது. மேலும், கொல்லப்பட்ட 28 பணய கைதிகளில் 17 பேரின் உடல்களை இஸ்ரேலிடம் ஒப்படைத்தது. இன்னும் 11 இஸ்ரேலிய பணய கைதிகளின் உடல்கள் ஹமாஸ் ஆயுதக்குழுவிடம் உள்ளன.

இதனை தொடர்ந்து ஒப்பந்தப்படி இஸ்ரேல் தங்கள் பிடியில் உள்ள பாலஸ்தீனிய சிறைக்கைதிகள் (ஹமாஸ் ஆயுதக்குழுவினர் உள்பட) பலரையும் விடுதலை செய்து வருகிறது. மேலும், உயிரிழந்த பாலஸ்தீனியர்களின் உடல்களும் ஒப்படைக்கப்படு வருகிறது. இந்நிலையில், 30 பாலஸ்தீனிய கைதிகளின் உடல்களை இஸ்ரேல் நேற்று ஒப்படைத்துள்ளது. இஸ்ரேலிய சிறைகளில் உயிரிழந்த ஹமாஸ் ஆயுதக்குழுவினர் உள்பட 30 பாலஸ்தீனிய கைதிகளின் உடல்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. காசா முனையில் ஹமாஸ் ஆயுதக்குழுவால் நிர்வகிக்கப்பட்டு வரும் சுகாதாரத்துறையிடம் உடல்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

# நிர்மலா சீதாராமனின் பூட்டான் பயணம் ரத்து

**புதுடெல்லி, நவ. 01-**

நிர்மலா சீதாராமனின் பூட்டான் பயணம் ரத்து செய்யப்பட்டது.

மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன், 4 நாட்கள் சுற்றுப் பயணமாக பூட்டான் செல்ல இருப்பதாக மத்திய நிதித்துறை அமைச்சகம் தெரிவித்திருந்தது. இந்தியாவின் அண்டை நாடுகளில் ஒன்றான பூட்டானுடன் இருதரப்பு கூட்டாண்மையை மேம்படுத்துவதற்காக இந்த பயணம் மேற்கொள்ளப்படுவதாகவும், நிர்மலா சீதாராமனுடன் மத்திய நிதி அமைச்சகத்தின் பொருளாதார விவகாரத்துறை குழு அதிகாரிகள் உடன் செல்வார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், பூட்டானில் நிர்மலா சீதாராமன் செல்ல இருந்த பாரோ விமான நிலைய பகுதியில் வானிலை மிகவும் மோசமாக இருப்பதால், மத்திய நிதி மந்திரியின் பூட்டான் சுற்றுப்பயணம் ரத்து செய்யப்படுவதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது. நிர்மலா சீதாராமன் தனது பூட்டான் சுற்றுப்பயணத்தின் முதல் நாளில் 1765-ம் ஆண்டு நிறுவப்பட்ட வரலாற்று சிறப்பு மிக்க சாங்சென் சோகோர் மடாலயத்திற்கு செல்ல இருந்தார். மேலும் இந்த சுற்றுப்பயணத்தின்போது நிர்மலா சீதாராமன் பூட்டான் மன்னர் மற்றும் பிரதமரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வங்கக்கடலில் 48 மணி நேரத்தில் புதிய புயல் சின்னம் உருவாக வாய்ப்பு

**சென்னை, நவ. 01-**

வங்கக்கடலில் அடுத்த 48 மணி நேரத்தில் புதிய காற்றழுத்த தாழ்வு உருவாக வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் வட கிழக்கு பருவமழை கடந்த 16-ம் தேதி தொடங்கியது. இதனையடுத்து தமிழகம் முழுவதும் பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் தான் வங்க கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு பகுதி வலுப்பெற்று தீவிர புயலாக உருவாகியுள்ளது. அந்த வகையில் அந்த புயலுக்கு மோன்தா என பெயரிடப்பட்டுள்ளது. முதலில் இந்த புயல் சென்னையை நோக்கி வருவதாக கணிக்கப்பட்ட நிலையில், தற்போது சென்னைக்கு அருகே வந்து அங்கிருந்து ஆந்திர மாநிலம் காக்கிநாடா - மசூலிப்பட்டினம் இடைய கரையை கடந்தது. இதையடுத்து தமிழகத்தில் பெய்து வந்த மழை நின்று தற்போது வெயில் அடிக்கத்தொடங்கி உள்ளது.

இந்நிலையில் வங்கக்கடலில் அடுத்த 48 மணி நேரத்தில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்பு உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தெற்கு மியான்மர், அந்தமான் கடல் பகுதிகளின் மேல் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. மத்திய கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி அடுத்த 48 மணி நேரத்தில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக்கூடும் என்று தெரிவித்துள்ளது.

# தமிழகத்தில் மழைக்கு வாய்ப்பு

**சென்னை, நவ. 01-**

வங்கக்கடலில் கடந்த வாரம் உருவான காற்றழுத்த தாழ்வு பகுதி வலுவடைந்து மோன்தா புயலாக மாறியது. இது திங்கட்கிழமை ஆந்திராவில் கரையை கடந்தது. தீவிர புயலாக வலுவடைந்து ஆந்திரா நோக்கி போனதால் தமிழகத்தில் பாதிப்பு இல்லை. அது காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடையும் வரை தமிழகத்தின் வடமாவட்டங்களில் பெரும்பாலான இடங்களில் மழை பெய்தது.

இந்த பருவமழை காலத்தின் முதல் காற்றழுத்த தாழ்வு பகுதி மூலம் இயல்பை விட கூடுதலாகவே மழை கிடைத்தது. வட மாவட்டங்களில் அதிக மழையை எதிர்பார்த்த நிலையில் ஏமாற்றத்துடன் கடந்து சென்றது. இந்த நிலையில் நேற்று 2 காற்றழுத்த தாழ்வு பகுதிகள் உருவானது. வடக்கு சத்தீஸ்கர் மற்றும் அதனையொட்டிய பகுதிகளில் நேற்று காலை 5.30 மணிக்கு உருவானது. இது வடக்கு- வடகிழக்கு நோக்கி நகர்ந்து வடக்கு சத்தீஸ்கர் மற்றும் அதனையொட்டிய பகுதிகளில் நிலை கொண்டுள்ளது.

இது வடக்கு-வட கிழக்கு நோக்கி, கிழக்கு உத்தரபிரதேசம் மற்றும் மேற்கு ஜார்க்கண்ட் வழியாக பீகாரை நோக்கி நகர்ந்து அடுத்து 24 மணி நேரத்தில் படிப்படியாக பலவீனம் அடையும் என்று இந்திய வானிலை மையம் தெரிவித்துள்ளது. இதேபோல கிழக்கு மத்திய அரபிக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை கடந்த 6 மணி நேரத்தில் மணிக்கு 7 கி.மீ. வேகத்தில் மெதுவாக வடக்கு- வடகிழக்கு நோக்கி நகர்ந்து நேற்று காலையில் அதே பகுதியில் நிலவுகிறது. இது அடுத்த 24 மணி நேரத்தில் கிழக்கு மத்திய அரபிக்கடலில் வடக்கு-வடகிழக்கு நோக்கி நகர்ந்து பின்னர் படிப்படியாக பலவீனம் அடையும் என்று தெரிவித்துள்ளது. புதிதாக உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு பகுதியால் தமிழகத்தில் மழைக்கு வாய்ப்பு இல்லை. மேலும் கிழக்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.

## ரூ. 1.86 லட்சத்திற்கு


# ஆன்லைனில் செல்போன் ஆர்டர் செய்த ஐ.டி. ஊழியருக்கு அதிர்ச்சி

**பெங்களூரு, நவ. 01-**

ஆன்லைனில் செல்போன் ஆர்டர் செய்த ஐ.டி.ஊழியருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. பார்சலில் செல்போனுக்கு பதில் வீட்டின் கட்டுமானத்திற்கு பயன்படுத்தப்படும் டைல்ஸ் கல் இருந்துள்ளது.

கர்நாடக மாநிலம் பெங்களூருவின் எலச்சென ஹள்ளி பகுதியை சேர்ந்தவர் பிரேமானந்த். இவர் பெங்களூருவில் உள்ள ஐ.டி. நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார். இதனிடையே, கடந்த 14ம் தேதி ஆன்லைன் வர்த்தக நிறுவனத்தில் ரூ.1.86 லட்சத்திற்கு செல்போன் ஒன்றை ஆர்டர் செய்துள்ளார். தனது கிரிடிட் கார்டு மூலம் அவர் ஆட்டர் செய்துள்ளார்.

இந்நிலையில், பிரேமானந்த் ஆர்டர் செய்த செல்போன் பார்சல் கடந்த 19ம் தேதி மாலை வீட்டிற்கு வந்து வந்துள்ளது. டெலிவரி ஊழியர் அந்த பார்சலை பிரேமானந்திடம் ஒப்படைத்துள்ளார். இதையடுத்து, வீட்டிற்கு வந்த பிரேமானந்த் பார்சலை திறந்து பார்த்துள்ளார். அப்போது அதில் செல்போனுக்கு பதில் வீட்டின் கட்டுமானத்திற்கு பயன்படுத்தப்படும் டைல்ஸ் கல் இருந்துள்ளது. இதனால் அதிர்ச்சியடைந்த பிரேமானந்த் உடனடியாக இதுகுறித்து தேசிய சைபர் குற்றப் பிரிவில் புகார் அளித்தார். மேலும், அப்பகுதியில் உள்ள போலீஸ் நிலையத்திலும் பிரேமானந்த் புகார் அளித்துள்ளார். புகாரின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



## 01-11-2025

# இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** பெண்களின் நட்பால் புதிய சுகம் ஏற்படும். அக்கறையுடன் படித்து மாணவர்கள் கல்வியில் தேர்ச்சி பெறுவர். தொழில், தொல்லைகள் குறைந்து, வியாபாரத்தில் எல்லைகள் விரியும்.

**ரிஷபம்:-** புதிய உத்தியோக வாய்ப்புகளை எதிர்பார்க்கலாம். அனைத்துப் பணிகளும் அனுகூலமான திசைகளிலும் நகரும். அரசு அதிகாரிகள் மூலம் எதிர்பார்த்த காரியங்களில் வெற்றி மேல் வெற்றி வரும்.

**மிதுனம்:-** வாழ்க்கையில் புதிய மாற்றங்களால் முன்னேற்றம் ஏற்படும். புண்ணிய காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும். இனிய உல்லாசப் பயணங்கள் ஏற்படும். சுகம் சந்தோஷம் கூடும்.

**கடகம்:-** எதையும் விளையாட்டு தனமாக எடுக்காமல் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய நாள். பிறர் துன்பத்தில் மகிழ்ச்சி காணாதீர்கள். உயர் அதிகாரிகளிடம் பணிவுடன் நடந்தால் உயர்வு உண்டு.

**சிம்மம்:-** சாதுர்யமான பேச்சால் சகலமானவர்களையும் சமாளித்துவிடுவீர்கள். வளமான வாழ்வும், வாகன யோகமும் உண்டு. வியாபாரத்தில் கவனத்துடன் செயல்பட்டால் இழப்பைத் தவிர்க்கலாம்.

**கன்னி:-** வெற்றியைத் தவிர வேறொன்றுமில்லை. நண்பர்களின் உதவி நலம் பயக்கும். வீடு, மனை வாங்கும் எண்ணங்கள் மனதில் இருந்தாலும், எதிர்பார்த்த வீட்டுக் கடன்கள் வரத் தாமதமாகும்.

**துலாம்:-** ஆரோக்கியத்தை பொருத்து குழந்தைகளை நல்ல அக்கறையுடன் கவனிப்பது முக்கியம். வெளியூர் பயணங்களில் கவனம் தேவை. அமைதியும், ஆதரவாக பேசும் பேச்சும் எதிர்ப்புக்களை குறைக்கும்.

**விருச்சிகம்:-** வேலை அதிகமாகும்.. வேண்டாத அலைச்சல்கள் ஏற்பட்டு ஓய்வு குறையும். அம்மாவின் ஆரோக்கியத்தை அக்கறையுடன் பேண வேண்டிய நாள். தொழிலில் புதிய முயற்சிகள் அனைத்தும் கை விடுவது நல்லது.

**தனுசு:-** மகிழ்ச்சியான மனநிலை தேகத்தில் தெம்பு தரும். மனைவியின் ஒத்துழைப்பால் மனம் குளிரும். குழந்தைகள் பால் பாசம் பொழிவார்கள். தொழில் வளர்ச்சியில் திருப்தி நிலவும்.

**மகரம்:-** மனைவியின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. எதிர்பார்த்த அளவுக்கு வரவினங்கள் இருக்காது. புதிய தொழில் முதலீடுகளை ஒத்திப் போடுவது நல்லது. .

**கும்பம்:-** ஆசைகள் நிறைவேற அனைத்து விஷயங்களிலும் மனத்திருப்தி ஏற்படும். புத்தி சாதுர்யமும், வாக்கு வன்மையும் ஓங்கி வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். இனிய பயணங்களால் இன்பம் பெருகும்.

**மீனம்:-** அன்றாட வாழ்க்கையில் எதிர்பார்த்த மாற்றங்கள் வந்து ஏற்றம் தரும். குழப்பவாதி மனைவியால் உறவுகளிடையே மனக்கசப்பு ஏற்படும். வாடிக்கையாளர் மனம் அறிந்து நடந்தால் இலாபம் அதிகரிக்கும்.

# நவம்பர் 3-ம் தேதி முதல் 6-ம் தேதி வரை முதியோர் வீடுகளுக்கு ரேஷன் விநியோகம்

**சென்னை, நவ. 01-**

முதியோர், மாற்றுத்திறனாளிகளுக்கு வீடுகளுக்கு நேரடியாக சென்று ரேஷன் விநியோகிக்கப்படும் என்று கூட்டுறவுத்துறை தெரிவித்துள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் சென்னை மண்டலம் .சா.பாபு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில், முதல்வரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் 65 வயதிற்கு மேற்பட்ட முதியோர் மற்றும் மாற்றுதிறனாளிகளின் இல்லத்திற்கே சென்று பொது விநியோகத்திட்ட பொருள்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. நவம்பர் 2025 திங்களுக்கு 03.11.2025 முதல் 06.11.2025 வரை சென்னையிலுள்ள அண்ணாநகர், ஆலந்தூர், பெருங்குடி, சோழிங்கநல்லூர், தேனாம்பேட்டை, அடையார், திருவொற்றியூர், மணலி, மாதவரம், தண்டையார்பேட்டை, ராயபுரம், திரு.வி.க.நகர், அம்பத்தூர், கோடம்பாக்கம் மற்றும் வளசரவாக்கம் ஆகிய 15 மண்டலங்களில் கூட்டுறவுத்துறையின் கீழ் செயல்படும் 990 நியாயவிலைக்கடைகளின் விற்பனையாளர்கள், அத்தியாவசியப் பொருட்களை வீடு தேடி விநியோகம் செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது.

இந்த தகவலை அனைத்து நியாய விலைக்கடைகளிலும் பொது மக்கள் அறியும் வகையில் தகவல் பலகையில் எழுதி வைக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் பயன்பெறும் முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் இத்திட்டத்தை தவறாமல் பயன்படுத்திகொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# ஐகோர்ட் மதுரை கிளைக்கு திடீர் வெடிகுண்டு மிரட்டல்

**மதுரை, நவ. 01-**

உயர்நீதிமன்ற மதுரை கிளைக்கு மீண்டும் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதை தொடர்ந்து மோப்ப நாய் உதவியுடன் தீவிர சோதனை நடைபெற்றது.



மதுரை ஐகோர்ட்டில் தமிழகத்தின் தென்பகுதியில் உள்ள 14 மாவட்டகளுக்கான வழக்குகள் விசாரிக்கப்பட்டு வருகிறது. எனவே வழக்கு தொடர்பாக வரும் பொது மக்கள், பல்வேறு மாவட்ட வழக்கறிஞர்கள் மதுரை ஐகோர்ட்டிற்கு வந்து செல்கிறார்கள். இதனால் ஐகோர்ட்டு வளாகம் எப்போதும் பரபரப்பாக காணப்படும். இந்த நிலையில் இ-மெயில் மூலமாக மதுரை ஐகோர்ட்டுக்கு வெடிகுண்டு மிரட்டல் வந்தது. இது தொடர்பாக உடனடியாக போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன் பேரில் போலீசார் ஐகோர்ட்டு வளாகத்தில் குவிக்கப்பட்டனர். முதல் கட்டமாக ஐகோர்ட்டின் நுழைவாயில் மூடப்பட்டது. உள்ளே இருப்பவர்கள் வெளியே செல்லாதவாறும், வெளியே இருந்து வருபவர்கள் உள்ளே நுழையாதவாறும் போலீசார் தடுப்பு காவலில் ஈடுபட்டனர். பின்னர் ஐகோர்ட்டு வளாகத்தில் வெடிகுண்டு சோதனை தொடங்கியது. இந்த சோதனை முழுமையாக முடிந்த பின்னரே கோர்ட்டுக்குள் அனுமதிக்கப்படுவார்கள் என்று போலீசார் தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து ஐகோர்ட்டு வளாகத்திற்கு விரைந்து வந்த வெடிகுண்டு தடுப்பு பிரிவு போலீசார் மோப்ப நாய் உதவியுடன் ஐகோர்ட்டு வளாகம், நீதிபதி குடியிருப்பு, நீதிமன்ற அரங்கம் உள்ளிட்ட பகுதிகளில் மெட்டல் டிடெக்டர் உதவியுடன் தீவிர சோதனை நடத்தப்பட்டது. இதற்கிடையில் வெடிகுண்டு மிரட்டல் குறித்து மின்னஞ்சல் அனுப்பிய நபர் யார்? என்பது குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள். இதனால் ஐகோர்ட்டு வளாகத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த மாதம் 26-ந்தேதி இதே போல ஐகோர்ட்டு பதிவாளர் இ-மெயிலுக்கு வெடிகுண்டு மிரட்டல் வந்ததும், சோதனைக்கு பின்பு புரளி என்பதும் தெரியவந்தது என்பது குறிப்பிடத்தக்கது.



சென்னை அறிவாலயத்தில் 'உன்பிறப்பே வா' என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கோவை, பொள்ளாச்சி, நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்து பேசினார்.

# கோவையில் அமையவுள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானம்

## டெண்டர் கோரியது தமிழ்நாடு அரசு

கோவை, நவ. 01- கோவையில் சர்வதேச கிரிக்கெட் மைதான பணிகளை மேற்கொள்ள டெண்டர் கோரியது தமிழக அரசு.

சென்னை சேப்பாக்கம் மைதானம் போல் கோவையிலும் உலக தரம் வாய்ந்த சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைக்கப்படும் என கடந்த மக்களவை தேர்தல் வாக்குறுதியில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்தார். இதற்காக நான்கு இடங்கள் முதல் தேர்வு செய்யப்பட்டதில் ஒண்டிப்புதூர் திறந்தவெளி சிறைச்சாலை இயங்கி வரும் இடத்தில் 20.72 ஏக்கரில் நிலம் தேர்வு செய்யப்பட்டது. இதனையடுத்து கிரிக்கெட் மைதானத்திற்கான விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்யும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வந்தது. தொடர்ந்து கோவையில் புதிய சர்வதேச கிரிக்கெட் மைதான கட்டுமானப் பணிகளுக்கு, இந்திய விமான நிலைய ஆணையம் தடையில்லா சான்று வழங்கி உள்ளது. இந்த நிலையில், கோவையில் அமைக்கப்பட உள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானத்தின் திட்டப் பணிகளை மேற்கொள்ள டெண்டர் கோரியது தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம்.

பொதுமக்கள் தனியார் பங்கேற்பு முறையில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. 20.72 ஏக்கரில் மைதானமும், 10 ஏக்கரில் வணிக வளாகமும் அமைக்கப்பட உள்ளது.

கிரிக்கெட் மைதானத்தில் உணவகம், ஸ்போர்ட்ஸ் பார், உயர் தர இருக்கை வசதி, உட்புற பயிற்சி அரங்கம், பில்டிங் மண்டலம், வீரர்கள் ஓய்வறை, விரிவுரை அரங்குகள், கிளப்ஹவுஸ், விஐபி அறைகள், ஸ்பாஸ், கார்ப்பரேட் அறைகள், பொழுது போக்கு வசதிகள் போன்றவை இடம்பெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

## இந்திரா காந்தி நினைவு தினம்:

# சோனியா, கார்கே, ராகுல்காந்தி அஞ்சலி

புதுடெல்லி, நவ. 01- இந்திரா காந்தி நினைவு தினத்தை முன்னிட்டு நினைவிடத்தில் சோனியா, கார்கே, ராகுல் காந்தி அஞ்சலி செலுத்தினர்.

இந்தியாவின் முதல் பெண் பிரதமரான இந்திரா காந்தி, கடந்த 1984-ம் ஆண்டு அக்டோபர் 31-ந்தேதி தனது பாதுகாவலர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் 41-வது நினைவு நாளான நேற்று காங்கிரஸ் தலைவர்கள் அவரது நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினர். டெல்லியில் உள்ள இந்திரா காந்தி நினைவிடத்தில் காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற குழு தலைவர் சோனியா காந்தி, தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி ஆகியோர் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

## மகன் குடும்பத்தை எரித்துக்கொன்ற

# கேரளா முதியவருக்கு தூக்கு தண்டனை

திருவனந்தபுரம், நவ. 01- மகன் குடும்பத்தை எரித்துக்கொன்ற கேரளா முதியவருக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது.

கேரள மாநிலத்தில் இடுக்கி மாவட்டம், சீனிக்குழி பகுதியை சேர்ந்தவர் ஹமீது (வயது 82). இவர் சொத்து பிரச்சினை காரணமாக கடந்த 2022-ம் ஆண்டு மார்ச் 19-ந்தேதி இரவு வீட்டில் தூங்கி கொண்டிருந்த தனது மகன் முகமது பைசல்(45), மருமகள் ஷீபா(40), பேத்திகள் மேகரின்(10), அஸ்னா(13) ஆகியோர் மீது பெட்ரோலை ஊற்றி தீ வைத்தார். அதில் அவர்கள் 4 பேரும் உடல் கருகி உயிரிழந்தனர்.

இது தொடர்பான வழக்கு விசாரணை தொடுபுழா முட்டம் கூடுதல் செஷன்ஸ் கோர்ட்டில் நடந்து வந்தது. இந்த நிலையில் இந்த வழக்கில் நேற்று முன்தினம் தீர்ப்பு கூறப்பட்டது. அதில் கொலையாளி ஹமீதுக்கு தூக்கு தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

## முழு காஷ்மீரும் இந்தியாவுடன் ஒருங்கிணைவதை

# நேரு அனுமதிக்கவில்லை: பிரதமர் நரேந்திர மோடி பேச்சு



அகமதாபாத், நவ. 01- முழு காஷ்மீரையும் இந்தியாவுடன் ஒருங்கிணைக்க விரும்பினார் படேல், ஆனால் நேரு அனுமதிக்கவில்லை என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

சர்தார் வல்லபாய் படேலின் 150வது பிறந்தநாளை முன்னிட்டு, குஜராத்தில் உள்ள நர்மதா ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள 597 அடி உயர சிலைக்கு பிரதமர் மோடி மரியாதை செலுத்தினார். அப்போது வல்லபாய் படேலின் சிலைக்கு ஹெலிகாப்டர் மூலம் மலர்கள் தூவப்பட்டன. பின்னர், பிரதமர் மோடிக்கு அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

அதன்பின்னர் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசியதாவது:- வரலாற்றை எழுத நேரத்தை வீணாக்கக்கூடாது. ஆனால் வரலாற்றை உருவாக்க நாம் கடினமாக உழைக்க வேண்டும் என்று சர்தார் படேல் நம்பினார். இந்தியாவை ஒன்றிணைப்பதன் மூலம் அவர் வரலாற்றைப் படைத்தார். இந்தியாவை ஒன்றுமையாக வைத்திருக்க வேண்டும் என்பதில் படேல் உறுதியாக இருந்தார்.

சுதந்திரத்திற்குப் பிறகு 550க்கும் மேற்பட்ட சமஸ்தானங்களை ஒன்றிணைக்கும் பணி சாத்தியமற்றது என்று கருதப்பட்ட நிலையில் அந்த பணியை சர்தார் படேல் செய்து காட்டினார். மற்ற சமஸ்தானங்களை போலவே முழு காஷ்மீரையும் இந்தியாவுடன் இணைக்க படேல் விரும்பினார். ஆனால் அப்போதைய பிரதமர் நேரு அதனை அனுமதிக்கவில்லை. படேல் தனது விருப்பத்தை நிறைவேற்றுவதை நேரு தடுத்தார். இதனால் காஷ்மீர் பிரிக்கப்பட்டது. தனி அரசியல் அமைப்பு சட்டம் உருவாக்கப்பட்டது. தனிக்கொடி வழங்கப்பட்டது. 370 பிரிவை நீக்கியதின் மூலம் காஷ்மீர் இன்று இந்தியாவுடன் ஒன்றுபட்டுள்ளது.

காங்கிரசின் தவறு காரணமாக இந்தியா பல தசாப்தங்களாக பாதிக்கப்பட்டது. சர்தார் வல்லபாய் படேல் வகுத்த கொள்கைகள் அவர் எடுத்த முடிவுகள் புதிய வரலாற்றை உருவாக்கியது.

அவருக்கு ஒரே பாரதம் என்ற உன்னத தொலைநோக்கு பார்வை மிகவும் முக்கியமானது. அவரது தொலைநோக்கு பார்வையை நாங்கள் நிறைவேற்றி காட்டுவோம். இன்று கோடிக்கணக்கான மக்கள் ஒற்றுமைக்கான சபதம் எடுத்துள்ளனர். நாட்டின் ஒற்றுமையை வலுப்படுத்தும் செயல்களை நாங்கள் ஊக்குவிப்போம். நாட்டின் ஒற்றுமையை பலவீனப்படுத்தும் ஒவ்வொரு சிந்தனையும் அல்லது செயலையும் ஒவ்வொரு குடிமகனும் புறக்கணிக்க வேண்டும். இது நம் நாட்டின் காலத்தின் தேவையாகும். சர்தார் படேல் வகுத்த கொள்கைகள், அவர் எடுத்த முடிவுகள் புதிய வரலாற்றை உருவாக்கி உள்ளது. ஊடுருவலுக்கு எதிராக தீவிர போராட்டத்தை மேற்கொள்ள இந்தியா முடிவு செய்துள்ளது. நாட்டிலிருந்து ஒவ்வொரு ஊடுருவல்காரரையும் வெளியேற்றுவதற்கு நாம் உறுதிமொழி எடுக்க வேண்டும். தேசிய பாதுகாப்பு விவகாரத்தில் எந்த சமரசமும் கிடையாது.

பாகிஸ்தான் பயங்கரவாதிகளுக்கு இந்தியாவின் வலிமை காட்டப்பட்டுள்ளது. இந்தியாவை எதிரி நாட்டு எல்லைக்குள் நுழைந்து தாக்க முடியும் என்ற தெளிவான செய்தியை ஆபரேஷன் சிந்தூர் வெளிப்படுத்தி உள்ளது. இதை உலகமும் பார்த்து விட்டது. பாகிஸ்தானும் தீவிரவாதத்தை கையாள்பவர்களும் இந்தியாவின் உண்மையான பலம் என்ன என்பதை இப்போது அறிந்திருக்கிறார்கள். படேலின் சுயமரியாதை மற்றும் ஒன்றுபட்ட இந்தியா என்ற தொலைநோக்கு பார்வையை காங்கிரஸ் மறந்து விட்டது. 2014-ஆண்டுக்கு முன்பு வரை நக்சலைட்டுகள் ஆதிக்கம் செலுத்தினார்கள். பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகளை தகர்த்தனர். நாங்கள் நக்சலைட்டுகளை ஒடுக்குவதில் உறுதியாக செயல்பட்டோம். முன்பு 125 மாவட்டங்கள் நக்சலைட்டுகளால் பாதிக்கப்பட்டன. தற்போது 11 மாவட்டங்களில் மட்டுமே நக்சலைட்டுகளால் பாதிப்பு உள்ளது. இதன் மூலம் நக்சலைட்டுகளின் ஆதிக்கம் குறைந்து வருகிறது. இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

## இன்று விளக்கம் அளிக்கிறேன்:

# அ.தி.மு.க.வில் இருந்து நீக்கம் செய்யப்பட்ட செங்கோட்டையன்

கோவை, நவ. 01- (இன்று) விரிவாக விளக்கம் அளிக்கிறேன். அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்டது குறித்து செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க.வில் இருந்து செங்கோட்டையன் நீக்கப்பட்டது குறித்து அவர் தெரிவித்ததாவது. அ.தி.மு.க.வில் இருந்து செங்கோட்டையன் நீக்கப்படுவதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளார். அ.தி.மு.க.வின் கொள்கை-குறிக்கோள்களுக்கும் கோட்பாடுகளுக்கும் முரணான வகையில் செயல்பட்டது, கட்சியில் இருந்து நீக்கப்பட்டவர்களுடன் தொடர்பு வைத்துக்கொண்டது உள்ளிட்ட காரணங்களால் செங்கோட்டையன் நீக்கப்படுவதாக அறிக்கை மூலம் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்டது குறித்து செங்கோட்டையனிடம் செய்தியாளர்கள் கேள்வியெழுப்பினர். இதற்கு பதிலளித்து செங்கோட்டையன் கூறியதாவது:- என்னை கட்சியில் இருந்து நீக்கியது குறித்து நாளை (இன்று) விரிவாக விளக்கம் அளிக்கிறேன். இன்று காலை 11 மணிக்கு தனது கட்சி அலுவலகத்தில் செய்தியாளர்களை சந்தித்து விரிவாக பேசுகிறேன்." என்று அவர் தெரிவித்துள்ளார்.

## வல்லபாய் படேல் 150-வது பிறந்தநாள்:

# ஜனாதிபதி, பிரதமர் மோடி புகழஞ்சலி

புதுடெல்லி, நவ. 01- வல்லபாய் படேலின் 150-வது பிறந்தநாளை முன்னிட்டு ஜனாதிபதி, பிரதமர் மோடி புகழஞ்சலி செலுத்தியுள்ளனர்.

இந்தியாவின் முதல் துணை பிரதமரும் உள்துறை அமைச்சருமான சர்தார் வல்லபாய் படேலின் 150-வது பிறந்தநாள் நேற்று கொண்டாடப்பட்டது. வல்லபாய் படேலின் பிறந்தநாள் தேசிய ஒருமைப்பாட்டு நாளாக கடைபிடிக்கப்படுகிறது. டெல்லியில் சர்தார் வல்லபாய் படேல் சிலைக்கு ஜனாதிபதி திரௌபதி முர்மு, மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, டெல்லி முதல்வர் ரேகா குப்தா உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்நிலையில் ஜனாதிபதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், இரும்பு மனிதர் சர்தார் வல்லபாய் படேலின் பிறந்தநாளில், நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். சர்தார் வல்லபாய் படேல் ஒரு சிறந்த தேசபக்தர்.

தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைவர் மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பியவர். அவர் தனது அசைக்க முடியாத உறுதிப்பாடு, அசாத்திய தைரியம் மற்றும் திறமையான தலைமை மூலம் நாட்டை ஒன்றிணைக்கும் வரலாற்றுப் பணியை நிறைவேற்றினார். அவரது அர்ப்பணிப்பும் தேசிய சேவை மனப்பான்மையும் நம் அனைவருக்கும் உத்வேகம் அளிக்கிறது. தேசிய ஒற்றுமை தினத்தை முன்னிட்டு, நாம் ஒன்றுபட்டு, வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க உறுதிமொழி எடுப்போம் என்று தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், சர்தார் வல்லபாய் படேலின் 150-வது பிறந்தநாளில் இந்தியா அவருக்கு மரியாதை செலுத்துகிறது. இந்தியாவின் ஒருங்கிணைப்புக்கு பின்னால் உந்து சக்தியாக அவர் இருந்தார். இதன் மூலம் நமது நாட்டின் வளர்ச்சிப் பாதையில் அதன் விதியை வடிவமைத்தார். தேசிய ஒருமைப்பாடு, நல்லாட்சி மற்றும் பொது சேவை மீதான அவரது அசைக்க முடியாத அர்ப்பணிப்பு இளம் தலைமுறைகளுக்கு ஊக்கமளிக்கிறது. தன்னம்பிக்கை கொண்ட இந்தியா என்ற அவரது தொலைநோக்கு பார்வையை நிலைநிறுத்துவோம் என்று தெரிவித்துள்ளார்.

## கட்டணமில்லா பேருந்து பயண அட்டை மூலம்

# டிச. 31-ம் தேதி வரை பயணிக்க போக்குவரத்து கழகம் அனுமதி

சென்னை, அக். 01- கட்டணமில்லா பேருந்து பயண அட்டை மூலம் டிசம்பர் 31-ம் தேதி வரை பயணிக்கலாம் என்று போக்குவரத்து கழகம் தெரிவித்துள்ளது.

கட்டணமில்லா பேருந்து பயண அட்டையை பயன்படுத்தி டிசம்பர் 31 வரை பயணம் செய்யும் வகையில் அனுமதி வழங்கப்படுவதாக போக்குவரத்து கழகம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

முதல்வர் மு.க.ஸ்டாலினின் உத்தரவின்படி, போக்குவரத்துத்துறை அமைச்சர் சட்டமன்ற நிகழ்வில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் வழங்கப்பட்டு வரும் கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகளை பயனாளிகள் இணையதளம் வாயிலாக விண்ணப்பித்து, பெற்றிட வழிவகை செய்யப்படும் என அறிவித்ததன் அடிப்படையில், இத்திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு பயணியர் மற்றும் பொருள் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை நிறுவனத்துடன் இணைந்து, மாற்றுத்திறனாளிகள், கண்பார்வை குறைபாடு உள்ளவர்கள், அறிவுசார் திறன் குறைபாடு உள்ளவர்கள், சுதந்திரப் போராட்ட வீரர்கள், தமிழறிஞர்கள் மற்றும் வயது முதிர்ந்த தமிழறிஞர்கள் உள்ளிட்ட பயனாளிகளுக்கு இணையதளம் வாயிலாக கட்டணமில்லா பயண அட்டைகளை பெறும் வசதி, முதற்கட்டமாக மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் 07.09.2023 அன்று முதல் அமல்படுத்தப்பட்டது.

பயனாளிகள், இத்திட்டத்தின் வாயிலாக எவ்வித சிரமுமின்றி தங்களது இருப்பிடத்திற்கு அருகாமையில் உள்ள அரசு இ-சேவை மையம் அல்லது https://www.tnesevai.tn.gov.in/ என்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பித்து கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகளை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். 2025-26ம் நிதி ஆண்டில் இணையதளம் வாயிலாக பேருந்து பயண அட்டையை புதுப்பிக்க ஏதுவாகவும், இவ்வசதியினை அனைத்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கும் (விழுப்புரம், சேலம், கோயம்புத்தூர், கும்பகோணம், மதுரை மற்றும் திருநெல்வேலி) விரிவுபடுத்தி, புதிதாக பயண அட்டையை பயனாளிகளுக்கு வழங்கவும், உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

இதனை செயல்படுத்த மாவட்ட அளவில் முகாம்கள் நடத்த வேண்டி உள்ளதால், ஏற்கனவே பயனாளிகள் பயன்படுத்தி வரும் அக்டோபர் 31 வரை செல்லத்தக்க கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகளை, டிசம்பர் 31 வரை மேலும் இரண்டு மாத காலத்திற்கு நீட்டித்து அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்யும் வகையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 9 ஆயிரம் கனஅடியாக சரிவு

ஒகேனக்கல், நவ. 01- காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் பெய்த மழை குறைந்ததால் ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 9 ஆயிரம் கனஅடியாக சரிந்துள்ளது. கர்நாடகா காவிரி கரையோரங்களில் பெய்த மழையின் காரணமாக ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து குறைவதும் அதிகரிப்பதுமாக இருந்து வருகிறது. இந்த நிலையில் தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 14 ஆயிரம் கனஅடியாக வந்தது. இதையடுத்து காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் பெய்த மழை குறைந்தது. இதன் காரணமாக நேற்று காலை 8 மணி நிலவரப்படி 9 ஆயிரம் கனஅடியாக தண்ணீர் குறைந்து வந்தது. இதனால் மெயின் அருவி, சினி பால்ஸ், ஐந்தருவி உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. இதனால் சுற்றுலா பயணிகள் பரிசல் பயணம் செய்து காவிரி ஆற்றின் அழகை ரசித்தனர். மேலும் அவர்கள் தொங்கு பாலத்தில் நின்று காவிரி ஆற்றில் பாறைகளுக்கு நடுவே விழும் தண்ணீரை ஆர்வமுடன் ரசித்து மகிழ்ந்தனர். பின்னர் மெயின் அருவியில் குளித்தும், பெண்கள் ஆற்றில் குளித்தும் மகிழ்ந்தனர். சுற்றுலா பயணிகள் மீன் சாப்பாடு வாங்கி கொண்டு பூங்காவில் அமர்ந்து சாப்பிட்டு மகிழ்ந்தனர். நீர்வரத்தை தமிழக-கர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

## சபரிமலை ஐயப்பன் கோவில்

# மண்டல பூஜைக்கான 'ஆன்லைன்' முன்பதிவு இன்று தொடங்குகிறது

சபரிமலை, நவ 01- சபரிமலை ஐயப்பன் கோவிலில் மண்டல பூஜைக்கான ஆன்லைன் முன்பதிவு இன்று முதல் தொடங்கப்பட்டது.

சபரிமலை ஐயப்பன் கோவிலில் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் மண்டல மற்றும் மகரவிளக்கு பூஜை காலத்தில் லட்சக்கணக்கான பக்தர்கள் மாலையணிந்து விரதம் இருந்து சாமி தரிசனம் செய்ய வருவார்கள். பக்தர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்தபடியே இருப்பது சபரிமலையின் தனிச்சிறப்பாகும்.

இந்த ஆண்டுக்கான மண்டல பூஜை அடுத்தமாதம் (நவம்பர்) 17-ந்தேதி தொடங்குகிறது. இதற்காக நவம்பர் 16-ந்தேதி மாலை 5 மணிக்கு கோவில் நடை திறக்கப்படுகிறது. மண்டல பூஜை டிசம்பர் மாதம் 27-ந்தேதி நடைபெறுகிறது. இதனால் நவம்பர் 17-ந்தேதி முதல் டிசம்பர் 27-ந்தேதி வரை கோவில் நடை திறந்திருக்கும். தினமும் வழக்கமான பூஜைகள் மற்றும் சிறப்பு பூஜைகள் நடைபெறும். அந்த நாட்களில் பக்தர்கள் நெய் அபிஷேகம் செய்து சாமி தரிசனம் செய்யலாம்.

சபரிமலையில் பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய கடந்த சில ஆண்டுகளாக ஆன்லைன் முன்பதிவு முறை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டும் அந்த முறை அமல்படுத்தப்படுகிறது. ஆன்லைன் முன்பதிவு (மெய் நிகர் வரிசை) மூலமாக 70 ஆயிரம் பேர், ஸ்பாட் புக்கிங் (உடனடி முன்பதிவு) மூலமாக 20 ஆயிரம் பேர் என தினமும் 90 ஆயிரம் பேர் சாமி தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள். மண்டல பூஜை காலம் மட்டுமின்றி, மகரவிளக்கு பூஜை காலத்திலும் இந்த முறை அமல்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது. இந்தநிலையில் மண்டல பூஜை காலத்தில் சபரிமலையில் பக்தர்கள் சாமி தரிசனம் செய்வதற்கான ஆன்லைன் முன்பதிவு இன்று (1-ந்தேதி) தொடங்குகிறது.

பக்தர்கள் தாங்கள் சாமி தரிசனம் செய்ய வரக்கூடிய தினத்தை தேர்வு செய்து, கேட்கக்கூடிய ஆவணங்களை பதிவிறக்கம் செய்து முன்பதிவு செய்யலாம். முன்பதிவு செய்தற்கான அனுமதி சீட்டு புக்கிங் செய்யக்கூடிய இ-மெயில் முகவரிக்கு அனுப்பப்படும். ஆன்லைன் முன்பதிவுக்கு இதுவரை கட்டணம் எதுவும் வசூலிக்கப்படவில்லை. ஆனால் இந்த ஆண்டு ஆன்லைன் முன்பதிவு செய்யும் பக்தர்களிடம் ரூ.5 கட்டணம் வசூலிக்கப்பட உள்ளது. சபரிமலைக்கு சாமி தரிசனம் செய்ய வரக்கூடிய பக்தர்கள் மரணமடைந்தால், அவர்களது குடும்பத்திற்கு ரூ.5லட்சம் இன்சூரன்ஸ் வழங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இதன் காரணமாக ஆன்லைன் முன்பதிவு செய்யும் பக்தர்களிடம் 5 ரூபாய் கட்டணமாக வசூலிக்கப்பட உள்ளது. ஆனால் இது கட்டாயமில்லை எனவும், விருப்பம் உள்ளவர்கள் மட்டும் இந்த கட்டணத்தை செலுத்தலாம். அதற்கு தகுந்தாற்போல் ஆன்லைன் முன்பதிவில் சில மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கிறது.

## பா.ம.க. உட்கட்சி பிரச்சினை:

# 6 மாதங்களில் சுமுக தீர்வு; அன்புமணி ராமதாஸ் உறுதி

சேலம், நவ. 01- பா.ம.க. உட்கட்சி பிரச்சினைக்கு 6 மாதத்தில் சுமுக தீர்வு ஏற்படும் என்று அன்புமணி ராமதாஸ் கூறினார்.

பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் சேலத்தில் நிருபர்களிடம் கூறியதாவது:-

டாஸ்மாக் கடைகளை அகற்ற வேண்டும் என நாங்கள் தொடர்ந்து போராடி வருகிறோம். நாங்கள் போராடியதால் தான் கோர்ட்டு உத்தரவின் பேரில் நெடுஞ்சாலைகளில் உள்ள டாஸ்மாக் கடைகள் அகற்றப்பட்டன. தமிழ்நாட்டில் உள்ள 40 மது ஆலைகளில் 7 ஆலைகளை தி.மு.க. கட்சியை சேர்ந்தவர்கள் வைத்துள்ளனர். டாஸ்மாக் கடைகளை அடைத்த பின்னர் சந்து கடைகள் மூலம் மது விற்பனை நடைபெற்று வருகிறது. மணல் குவாரிகளில் மிகப்பெரிய ஊழல் நடந்து வருகிறது.

ஒரு சில கட்சிகளில் உட்கட்சி பிரச்சினை இருக்கிறது. தேர்தலுக்கு இன்னும் 6 மாதங்கள் உள்ளன. அதற்குள் எந்த பிரச்சினையாக இருந்தாலும் சரி, எங்கள் உட்கட்சி பிரச்சினையாக இருந்தாலும் சரி சுமுகமாக தீர்க்கப்படும். தேர்தல் கூட்டணி குறித்து பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. முன்கூட்டியே தெரிவிக்க முடியாது, விரைவில் அறிவிப்பேன். மக்களுக்கான திட்டங்களை நிறைவேற்றாமல் பெயர் மட்டும் வைத்து தி.மு.க. விளம்பர ஆட்சி நடத்துகிறது. நல்ல திட்டங்களை செயல்படுத்த முதல்-அமைச்சருக்கு தெரியவில்லை. இந்த தேர்தலில் தி.மு.க. படுதோல்வி அடையும். இவ்வாறு அவர் கூறினார்.

## குற்றமற்றவர்கள் என்பதை நிரூபிப்போம்:

# அமலாக்கத்துறையின் புகாருக்கு அமைச்சர் கே.என்.நேரு விளக்கம்

திருச்சி, நவ. 01- குற்றமற்றவர்கள் என்பதை நிரூபிப்போம் என்று அமலாக்கத்துறை புகாருக்கு அமைச்சர் கே.என்.நேரு விளக்கம் அளித்துள்ளார்.

திருச்சி மத்திய வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வாக்குச்சாவடி ஆலோசனை கூட்டம் கலைஞர் அறிவாலயத்தில் நேற்று நடைபெற்றது. கூட்டம் முடிந்தபின் அமைச்சர் கே.என்.நேரு நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

அமலாக்கத்துறை நடத்திய சோதனையின் பொழுது சில ஆவணங்கள் கிடைத்ததாகவும், அது குறித்து ஆய்வு செய்யுமாறு அமலாக்கத்துறை தமிழக காவல்துறைக்கு கடிதம் எழுதி உள்ளது. அதன் அடிப்படையில் தமிழக போலீசார் அந்த ஆவணங்களை ஆய்வு செய்வார்கள். முறைகேடு நடந்ததா? என்பதை போலீசார் விசாரிப்பார்கள். ஆனால் நான் எந்த வித தவறும் செய்யவில்லை. விசாரணையில் குற்றமற்றவர்கள் என்பதை நிரூபித்து காட்டுவோம். தி.மு.க.வை மிரட்டி பார்ப்பதற்காக கூட இதுபோன்று அவர்கள் செய்யலாம். தி.மு.க.வில் மூத்த தலைவர்களை ஓரங்கட்டும் வேலையை யாரும் செய்யவில்லை. தேர்தல் நேரத்தில் எங்களை விமர்சிக்க எதிர்க்கட்சிக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. அவ்வளவுதான்.

எங்கள் கூட்டணியில் இருந்து யாரும் வெளியே செல்லவில்லை. அ.தி.மு.க. கூட்டணியில் இருந்து தான் ஒவ்வொருவராக வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

ஓ.பி.எஸ்., டி.டி.வி. தினகரன் உள்ளிட்டோரை தி.மு.க.வின் பி.டீம் எனக் கூறும் எடப்பாடி பழனிசாமி அவர் வாயில் வந்ததை பேசிக்கொண்டு உள்ளார். சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்த முகாம் நேர்மையாக நடந்தால் சரியாக இருக்கும். ஆனால் வேண்டுமென்றே பல வாக்காளர்களை கொத்துக்கொத்தாக வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதையும், நீக்குவதையும் தான் நாங்கள் எதிர்க்கிறோம் என்றார்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



பீகார் மக்களை கீழ்த்தரமாக பேசுவது தி.மு.க.வினர் என்றுதான் பிரதமர் சொன்னார். தமிழர்களை அல்ல. தி.மு.க.வில் எம்.பி.க்களாக இருக்கும் பாதி பேர் பச்சை தமிழர்களே கிடையாது. தி.மு.க. மீது வைக்கப்படும் விமர்சனங்கள் தி.மு.க. மீது தான் வைக்கப்படுகிறது. தமிழர்கள் மீது அல்ல.

- தமிழிசை



வடமாநிலங்களில் தேர்தல் வந்துவிட்டால், தமிழ்நாட்டையும் தமிழர்களையும் எதிரியாகச் சித்தரித்து வெறுப்புவாத அரசியல் செய்வது பா.ஜ.க.வின் வாடிக்கை. தமிழ்நாட்டில் கடந்த நான்காண்டுகளாக பீகாரைச் சேர்ந்த ஒருவர் மட்டுமே தனது அரசியலைச் செய்யமுடியாமல் துன்பப்பட்டு வருகிறார். அவரும் ராஜ்பவனில் வசித்துவருகிறார்.

- கனிமொழி எம்.பி.



தமிழகத்திலுள்ள பீகார் மக்கள் குறித்து பிரதமர் மோடி பேசியது அண்டப் புளுகு, ஆகாசப் புளுகு. இது ஆபத்தான அணுகுமுறை. பீகாரில் வாக்குகளை பெறுவதற்காக பா.ஜ.க. இத்தகைய அரசியலை செய்கிறது. பிரதமரே இப்படி பேசியிருக்கிறார் என்பது அதிர்ச்சியளிக்கிறது. பிரதமரின் இந்த கருத்து ஏற்கத்தக்கது அல்ல.

- திருமாவளவன்



பீகார் மாநில மக்கள் தமிழ்நாட்டில் தாக்கப்படுவது உண்மையா என அம்மாநில முதல்வர் நிதிஷ்குமார் அவர் மாநிலத்தை சார்ந்தவர்கள் கொண்ட குழுவை அனுப்பி தமிழகத்தில் ஆய்வு செய்தார். அவர்கள் தந்த அறிக்கையில் தமிழ்நாட்டில் பீகாரிகள் நிம்மதியாக வாழுகிறார்கள் என்று கூறுகிறது. அதை மோடி படித்து பார்க்க வேண்டும்.

- ஆர்.எஸ்.பாரதி

# சென்னையில் 10 காவல் அதிகாரிகள் பணி ஓய்வு: கூடுதல் ஆணையர் பாராட்டி சான்றிதழ்கள் வழங்கினார்



சென்னை நவ 01-

சென்னை பெருநகர காவல் ஆணையரகத்தில் நடைபெற்ற 10 காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களின் பணி நிறைவு விழாவில், சென்னை பெருநகர காவல் ஆணையர் உத்தரவின்பேரில், தலைமையிட காவல் கூடுதல் ஆணையர், காவல் துறையினரின் பணியை பாராட்டி சான்றிதழ்கள் வழங்கினார்.

சென்னை பெருநகர காவல் துறையில் பணிபுரிந்து வரும் 1 அமைச்சுப்பணி நிர்வாக அதிகாரி, 3 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 6 சிறப்பு உதவி ஆய்வாளர்கள் என மொத்தம் 10 அமைச்சுப் பணியாளர் மற்றும் காவல் அதிகாரிகள் நேற்று பணி ஓய்வு பெற்றனர்.

சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண், உத்தரவின்பேரில், தலைமையிட காவல் கூடுதல் ஆணையர் விஜயேந்திர பிதாரி, நேற்று வேப்பேரி, சென்னை பெருநகர காவல் ஆணையரகத்தில் நடைபெற்ற பணி நிறைவு விழாவில், சென்னை பெருநகர காவலில் பணிபுரிந்து நேற்று ஓய்வு பெறுகின்ற 10 காவல் துறையினர், சுமார் 25 ஆண்டுகளுக்கும் மேலாக சிறப்பாக பணிபுரிந்ததை பாராட்டி, தமிழக காவல்துறைக்கும், சென்னை பெருநகர காவல்துறைக்கும் பெருமை சேர்த்ததை நினைவு கூர்ந்து, சால்வை மற்றும் மாலை அணிவித்து பாராட்டி, சான்றிதழ்கள் வழங்கினார்கள்.

கூடுதல் காவல் ஆணையர், ஓய்வு பெறுகின்ற காவல் குடும்பத்தினரிடம், காவல்துறைக்கு ஒத்துழைப்பு அளித்தமைக்காக நன்றி தெரிவித்தும், பணி ஓய்வு பெறுகின்ற காவல் அதிகாரிகள், அலுவலர்கள் தங்களது உடல் நலத்தையும், குடும்பத்தையும் பேணி காக்க வேண்டும் என அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் துணை ஆணையர்கள் டி.என்.ஹரிகிரண் பிரசாத், எம்.இராதாகிருஷ்ணன், ஐ.ஜெயகரன், காவல் அதிகாரிகள் மற்றும் ஓய்வு பெறுகின்ற காவல் அலுவலர்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

# 3-வது ஆசிய இளைஞர் தடகளப்போட்டி மற்றும் 4-வது தெற்காசிய சீனியர் தடகள போட்டிகளில் பதக்கங்கள் வென்ற 8 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு ரூ.40.50 லட்சம் ஊக்கத்தொகை

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி வாழ்த்து

**சென்னை,நவ.01**

துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 3வது ஆசிய இளைஞர் விளையாட்டு தடகளப் போட்டி மற்றும் 4வது தெற்காசிய சீனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற 8 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு மொத்தம் 40.50 லட்சம் ரூபாய்க்கான ஊக்கத்தொகை காசோலைகளை வழங்கி, மேலும் பல பதக்கங்கள் வெல்ல வாழ்த்து தெரிவித்தார்.

**வாழ்த்து**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளை நிதியிலிருந்து 2025 அக்டோபர் 24 முதல் 26 வரை ராஞ்சியில் நடைபெற்ற 4வது தெற்காசிய சீனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் 110 மீட்டர் தடை தாண்டும் பேட்டி பிரிவில் புதிய போட்டி சாதனையுடன் தங்க பதக்கம் வென்ற தடகள வீரர் ஆர்.மானவ் அவர்களுக்கு 2,00,000 ரூபாய்க்கான காசோலை, 100 மீட்டர் தடை தாண்டும் பிரிவில் புதிய போட்டி சாதனையுடன் தங்கப்பதக்கம் வென்ற தடகள வீராங்கனை கே.நந்தினி அவர்களுக்கு 2,00,000 ரூபாய்க்கான காசோலை, 4x400 மீட்டர் (கலப்பு) ரிலே பிரிவில் தங்கப் பதக்கம், 4x400 மீட்டர் (பெண்கள்) ரிலே பிரிவில் தங்கப் பதக்கம், 400 மீட்டர் பிரிவில் வெள்ளி பதக்கம் மற்றும் 400 மீட்டர் தடைதாண்டுதல் பிரிவில் வெண்கல பதக்கம் என 4 பதக்கங்கள் வென்ற ஒலிம்பா ஸ்டெபி அவர்களுக்கு 6,50,000 ரூபாய்க்கான காசோலை, 4x400 மீ (ஆண்கள்) ரிலே பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்ற தடகள வீரர் எம்.ஷரன் அவர்களுக்கு 1,50,000 ரூபாய்க்கான காசோலை, டிரிபிள் ஜம்ப் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்ற தடகள வீரர் வி. தினேஷ் அவர்களுக்கு 1,50,000 ரூபாய்க்கான காசோலை, உயரம் தாண்டுதல் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற தடகள வீரர் ஆதர்ஷ் ராம் அவர்களுக்கு 1,00,000 ரூபாய்க்கான காசோலை, நீளம் தாண்டுதல் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற தடகள வீராங்கனை பவானி யாதவ் பகவ் அவர்களுக்கு 1,00,000 ரூபாய்க்கான காசோலை என தடகள போட்டிகளில் பதக்கங்களை வென்ற 7 வீரர், வீராங்கனைகளுக்கு மொத்தம் 15.50 ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.



**ஊக்க தொகை**

மேலும் 3-வது ஆசிய இளைஞர் விளையாட்டுப் போட்டியில் 400 மீட்டர் பிரிவில் வெள்ளிப்பதக்கம் மற்றும் மெட்லிரிலே பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்ற எட்வினாஜேசன் அவர்களுக்கு உயரிய ஊக்கத்தொகையாக 20.00 லட்சம் மற்றும் தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளை நிதியிலிருந்து 5.00 லட்சம் என மொத்தம் 25,00,000 ரூபாய்க்கான காசோலையை துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இன்றைய தினம் பதக்கங்கள் வென்ற 8 விளையாட்டு வீரர் வீரங்கனைகளுக்கு மொத்தம் தொகை 40,50,000 ரூபாய்க்கான ஊக்கத்தொகை காசோலைகளை துணை முதலமைச்சர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர்ஜெ.மேகநாத ரெட்டி, தமிழ்நாடு தடகள சங்க செயலாளர்.சி.லதா மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஆலப்பாக்கம் 147 வது வார்டில் சிறப்பு கூட்டம்



**சென்னை நவ 01-**

வளசரவாக்கம் மண்டலம் 147 வது வார்டில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை குறை தீர்ப்பு 147வது வார்டு சிறப்பு கூட்டம் ஆலப்பாக்கத்தில் மாமன்ற உறுப்பினர் ரமணிமாதவன் தலைமையில், முன்னாள் கவுன்சிலர் எஸ்.ஜி.மாதவன் உதவி பொறியாளர் ஆகியோர் முன்னிலையில் அனைத்து அரசுத் துறை அதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஏரியா சபை உறுப்பினர்கள், 147 வது வார்டிற்கு உட்பட்ட அனைத்து பொது நல சங்க நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டு தங்கள் பகுதியில் உள்ள குறைகள் மற்றும் தேவைகளை எடுத்துரைத்து கடிதம் மூலமாக சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் மனு அளித்த நிலையில் அனைவரின் கோரிக்கையை விரைவில் நிறைவேற்றுவதாக உறுதியளித்தார்.

இந்த் கூட்டத்தில் ஜி.பி. ஆனந்தகுமார் க.பிருந்தாவனன், ஜி.குப்புசாமி, உதயம் இ. வேணு, ஜெயமுருகன், ரவிக்குமார், ஜெயக்குமார்,

இ.நா கேந் தி ரன், கிருஷ்ணா நகர் ஜெயக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். அதிகாரிகள் வருவாய் அலுவலர், மாநகராட்சி உதவி பொறியாளர்கள், மெட்ரோ குடிநீர் துணைப்பகுதி பொறியாளர், மின்வாரிய உதவி பொறியாளர்கள், தூய்மை பணி மேலாளர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# சென்னை வில்லிவாக்கம், காந்தி நகர், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் டிசம்பர் மாதத்திற்குள் மக்களிடம் ஒப்படைக்கப்படும்: அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்

**சென்னைநவ.01**

சென்னை, வில்லிவாக்கம், மண்டலம்-8, வார்டு-96, நியூ ஆவடி சாலையில் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் கட்டப்பட்டு வரும் காந்தி நகர் புதிய அடுக்குமாடி குடியிருப்புகளின் முன்னேற்றப் பணிகளை அமைச்சர்பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரரை அறிவுறுத்தினார்.

அமைச்சர் பிகே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது: திராவிட மாடல் ஆட்சியில் "குடிசை மாற்று வாரியம்" என்று இருந்ததை மாற்றி "வாழ்விட மேம்பாட்டு வாரியம்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டு, அதன் சார்பில் 25 ஆண்டுகளுக்கு மேலாக சிதிலமடைந்த நிலையில் இருந்த குடியிருப்புகளை முழுமையாக அகற்றி, புதிய குடியிருப்புகள் கட்டும் திட்டம் கொண்டு வரப்பட்டது.

மாவட்ட அமைச்சராக உள்ள எங்கள் பகுதியில், பி.ஆர். கார்டன் பகுதி, நேர்மை நகர் பகுதி, சேத்துப்பட்டு, எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வேம்புலி அம்மன் திட்ட பகுதி, கொய்யா தோப்பு திட்ட பகுதி, எம்.எஸ். நகர் திட்ட பகுதி போன்ற இடங்களில் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த பணிகளை விரைவுபடுத்தும் நோக்கில், துறையின் செயலாளர் திருமதி காகர்லா உஷா அவர்கள், அந்தந்த தொகுதிகளுக்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் துறை, மின்சார துறை, சென்னை மாநகராட்சியின் அதிகாரிகள் ஆகியோர் ஒருங்கிணைந்து பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். வில்லிவாக்கம், காந்தி நகர், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுமான பணிகள் நிறைவடைந்தவுடன், குடியிருப்புகளுக்கு தேவையான மின்சாரம், குடிநீர் வசதி, கழிவுநீர் வசதி போன்ற அனைத்தும் துரிதமாக ஏற்பாடு செய்யப்படுகின்றன.

இந்த கட்டுமானப் பகுதிகளில் ஏற்கனவே 496 குடியிருப்புகள் இருந்தன. தற்போது 500 குடியிருப்புகளை அமைக்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. முன்பு இருந்த 317 சதுர அடிக்கு பதிலாக தற்போது 417 சதுர அடியாக புதிய குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன.

காந்தி நகர் திட்ட பகுதியில் ஏற்கனவே வசித்து வந்த மக்களுக்கு, மறுகட்டுமானம் முடியும் வரை வெளியில் தங்குவதற்காக முந்தைய காலங்களில் மாதம் ரூ.8,000 இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டது. தற்போதைய ஆட்சியில், மக்களின் நலனை கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அந்தத் தொகை ரூ.24,000 ஆக உயர்த்தியுள்ளார். மறுகட்டுமானம் முடியும் வரை மாதந்தோறும் அந்தத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சி பொறுப்பு ஏற்ற பிறகு, கூடுதலாக கட்டப்படும் இடங்களின் பரப்பளவைப் பொருத்து முன்பு வசூலிக்கப்பட்ட கூடுதல் தொகை தொடர்பாக மக்களின் மன நிலை கருத்தில் கொண்டு, மாதாந்திர தவணை முறையில் கட்டணத்தை செலுத்தும் வகையில் புதிய ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது. இது ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்கள் வசிக்கும் வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பாளர்களுக்கு பெரிதும் உதவியாக உள்ளது.





இந்த திட்டப் பகுதிகளைப் பொருத்த அளவில், நிச்சயமாக டிசம்பர் மாதத்திற்குள் குடியிருப்புகள் மக்களிடம் ஒப்படைக்கப்பட்டு, ஜனவரி மாதம் தைத் திருநாளையும் தமிழ் புத்தாண்டையும் முன்னிட்டு, புதிய குடியிருப்புகளில் ஏற்கனவே வசித்த 496 குடும்பங்களும் குடியேறுவார்கள் என நம்பிக்கையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பள்ளிக்கரணை சதுப்புநிலத்தில் கட்டிட அனுமதி குறித்த செய்தியாளர் கேள்விக்கு அமைச்சர் அவர்களின் பதில்:

ஊடக நண்பர்களே, இது குறித்து நேற்று முழுமையாக விளக்கம் அளிக்கப்பட்டு, பல ஊடகங்களில் பெரிதும் செய்தியாக வந்தது. கேள்வி எழுப்பிய அன்புச் சகோதரி அவர்களுடைய தொலைக்காட்சியிலும் இதுவே பெரிய செய்தியாக வெளியானது.

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் நிலைப்பாடு தெளிவானது – சட்ட விதிமீறல்கள் இருந்தால், ஒரு இமி அளவு கூட அனுமதி வழங்கப்படாது. கட்டிடங்கள் முடிக்கப்பட்ட பின்னரும் Completion Certificate (CC) வழங்கும்போது சிறிய விதிமீறல் இருந்தாலும் அனுமதிக்கப்படாது. சட்டத்திற்குட்பட்ட ஆட்சி என்பது தமிழக முதல்வர் அவர்களின் கொள்கை. எனவே, வழங்கப்படும் அனைத்து அனுமதிகளும் சட்டப்படி வழங்கப்பட்டவையே. இதுகுறித்து அரசின் சார்பில் நேற்று தெளிவான விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வின்போது வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர். வெற்றி அழகன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர்காகர்லா உஷா, மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர்.எச்.ஆர். கௌஷிக், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய தலைமைப் பொறியாளர்.கிருஷ்ணசாமி, கண்காணிப்புப் பொறியாளர்.இளம்பரிதி, மண்டலக் குழுத்தலைவர். கூ.பீ.ஜெயின், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி.தனலட்சுமி, .செம்மொழி, உள்ளாட்சி பிரதிநிதிகள் திரு.வே.வாசு, திரு. வேதா, மின்சாரத்துறை, சென்னை குடிநீர் வடிகால் வாரியம், காவல்துறை மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

# ஆர்பிஎப், சிஇஜஆர் போர்ட்டல் மூலம் ரூ.30 லட்சம் மதிப்பு செல்போன்கள் மீட்பு

**சென்னை,நவ.01-**

ரயில் பயணிகள் சேவையை மேம்படுத்தவும், டிஜிட்டல் திறனை உயர்த்தவும் தெற்கு ரயில்வேயின் ரயில்வே பாதுகாப்பு படை (ஆர்பிஎப்) ஏப்ரல் மாதம் முதல் மத்திய உபகரண அடையாள பதிவேடு (சிஇஜஆர்) மூலம் சுமார் 30 லட்சம் ரூபாய் மதிப்பிலான 120க்கும் மேற்பட்ட இழந்த மொபைல் போன்களை வெற்றிகரமாக மீட்டுள்ளது. ரயில் பயணிகளின் இழந்த மொபைல் போன்களை கண்டறிந்து திரும்ப ஒப்படைக்க உதவும் வகையில், தொலைத்தொடர்பு துறை (டிஓடி) இந்த வசதியை ஆர்பிஎப்க்கு விரிவுபடுத்தியது. இந்த வசதி அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, ஆர்பிஎப் தமிழ்நாடு மற்றும் கேரளாவிற்குள் மட்டுமல்லாமல், ராஜஸ்தான், அசாம், தெலங்கானா, மகாராஷ்டிரா போன்ற தொலைதூர மாநிலங்களில் இருந்தும் போன்களை கண்டறிந்து மீட்டுள்ளது. ரயிலில் பயணம் செய்யும் போதோ அல்லது ரயில் நிலையத்தில் இருக்கும் போதோ ஒரு பயணி மொபைல் போனை இழந்தால், அருகிலுள்ள ஆர்பிஎப் போஸ்ட்டில் அல்லது ரயில் மதாத் போர்ட்டல் மூலம் புகார் அளிக்கலாம். புகாரைப் பெற்ற பிறகு, ஆர்பிஎப் இழந்த சாதனத்தின் பிராண்ட், நிறம், மாடல் மற்றும் மொபைல் எண் போன்ற அத்தியாவசிய விவரங்களை சேகரிக்கிறது. இந்த தகவல்கள் சிஇஜஆர் போர்ட்டலில் பதிவேற்றப்படுகின்றன, அங்கு சாதனம் உடனடியாக தடுக்கப்பட்டு தவறாகப் பயன்படுத்தப்படுவது தடுக்கப்படுகிறது. பின்னர், போன் புதிய சிம் உடன் செயல்படுத்தப்பட்டால், போர்ட்டல் மூலம் புதிய பயனரை ஆர்பிஎப் அடையாளம் கண்டு, அவர்களை தொடர்பு கொண்டு, சாதனத்தை உரிய உரிமையாளருக்கு பாதுகாப்பாக திரும்ப ஒப்படைக்க ஏற்பாடு செய்கிறது. இந்த முறையான மற்றும் தொழில்நுட்ப அடிப்படையிலான அணுகுமுறையைப் பயன்படுத்தி, ஆர்பிஎப்/ தென் ரயில்வே ஆப்பிள், சாம்சங், விவோ, மோட்டோரோலா, ரெட்மி போன்ற பல்வேறு பிராண்டுகளைச் சேர்ந்த போன்களை மீட்டு, உரிய உரிமையாளர்களிடம் ஒப்படைத்துள்ளது. நேற்று ஒப்படைக்கப்பட்ட போன்களில், சென்னை (தமிழ்நாடு), வயநாடு (கேரளா), ஜௌன்பூர் (உத்தரபிரதேசம்) ஆகிய இடங்களைச் சேர்ந்த பயணிகளுக்கானவை அடங்கும். சில சாதனங்கள் வேலூர் (தமிழ்நாடு), பிகானர் (ராஜஸ்தான்), பாட்னா (பீகார்) போன்ற இடங்களில் இருந்து கண்டறியப்பட்டன. இழந்த பொருட்களை உடனடியாக புகாரளிக்க ரயில் மதாத் போர்ட்டல் மற்றும் உதவி எண் 139ஐப் பயன்படுத்தலாம் என தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

# நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்டு, பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 2 பேர் கைது

**சென்னை நவ01-**

திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் கடந்த 2023ம் ஆண்டுகாய மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தில் பதிவான வழக்கில் எதிரிகள் செல்வம் மற்றும் சந்துரு ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

சென்னை, எழும்பூர், கனம் 2வது பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு மேற்படி 2 எதிரிகளும் ஆஜராகி வந்த நிலையில், நீதிமன்ற பிணையில் மேற்படி எதிரிகள் இருவரும் வெளியே சென்றனர்.

பின்னர் மேற்படி வழக்கு தொடர்பாக நீதிமன்ற விசாரணை முடிவடைந்து, கடந்த 28.03.2025 அன்று நீதிமன்றத்தால் எதிரிகள் செல்வம் மற்றும் சந்துரு ஆகிய இருவருக்கும் தலா 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் ரூ.12,ஆயிரம் அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டு, மேல்முறையீடு செய்வதற்காக 1 மாதம் கால அவகாசம் வழங்கப்பட்டது.

இந்நிலையில் மேற்படி எதிரிகள் இருவரும் மேல்முறையீடு செய்யாமல் தலைமறைவான காரணத்தினால், 2 எதிரிகளையும் கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த கடந்த 17 ந் தேதி அன்று நீதிமன்றத்தால் தண்டனை பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

திருவல்லிக்கேணி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை மற்றும் தேடுதலில் ஈடுபட்டு, தண்டனை பிடியாணை பிறப்பிக்கப்பட்ட குற்றவாளிகள் 1.செல்வம், 2.சந்துரு, ஆகிய 2 பேரை கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டு, தண்டனை பிடியாணை நிறைவேற்றப்பட்டது.

மழைநீர் உயிர்நீர்


**ENROLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within Three Months thereafter. I, **ANUGANDHI R S/o. Rajarajan , Date of Birth : 07.02.1984, Permanently Residing at : D.No. 18/25D, Ramakrishna Road, LRN Bus Shed, Hasthampatti, Salem District, Tamilnadu - 636 007.** Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry, Bar Council Buildings High Court Campus, Chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within Ten days.

**ANUGANDHI R**

**ENROLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within Three Months thereafter. I, **R. DEEPAN CHAKRAVARTHI S/o. Ramesh, Date of Birth :20.06.1994 Permanently Residing at : D.No. 2/81, Murugan Kovil Back Side, Dasanaickenpatti, Salem District, Tamilnadu - 636 201.** Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry, Bar Council Buildings High Court Campus, Chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within Ten days.

**R. DEEPAN CHAKRAVARTHI**

**ENROLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within Three Months thereafter. I, **KAVITHA S D/o. Srirangam, W/o. Srinivasan K Date of Birth :16.12.1977, Permanently Residing at : D.No. A-50, Ezhil Nagar, Judge Road, Kannankurichi, Salem District, Tamilnadu - 636 008.** Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry, Bar Council Buildings High Court Campus, Chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within Ten days.

**KAVITHA S**

சேலம் மாவட்ட 3 வது கூடுதல் அமர்வு நீதிமன்றம் முன்பாக
**O.S.No. 270/2017**

பரமசிவம் வகையறா,
க.எண்.74/3ஈ., அச்சுவான் நகர்,
முத்துநாயக்கன்பட்டி ரோடு,
சேலம் - 636 005.
...வாதிகள்

/ Vs /

ராமசாமி, த/பெ. கண்ணுப்பையன்,
வெக்காளியம்மன் கோவில் அருகில்,
ஜாகீர்காமநாக்கியன்பட்டி,
பர்ன் & கோ அஞ்சல்,
சேலம் - 636 302.
...16 ம் பிரதிவாதி

அறிவிப்பு

மேற்படி பரமசிவம் வகையறா தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண். 270/2017 ல் I.A.No. 9/2025 மேற்படி நீதிமன்றத்தில் தற்போது நிலுவையில் உள்ளது. மேற்படி மனுவில் 16 -ம் மனுதாரரான உங்களுக்கு நீதிமன்றம் மூலம் பல முறை அறிவிப்பு அனுப்பியும் நீங்கள் மேற்படி நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. ஆகையால் வருகின்ற **18.11.2025** -ம் தேதியில் நீங்கள் காலை 10.00 மணிக்கு மேற்படி நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி மேற்படி மனுவின் பேரில் உங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருக்கும் பட்சத்தில் உங்கள் தரப்பு வாதங்களை முன்வைக்க இதன் மூலம் உங்களுக்கு அறிவிக்கப்படுகிறது. தவறும்பட்சத்தில் மேற்படி மனு ஒருதலைபட்சமாக அனுமதிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

/கோர்ட் உத்தரவுப்படி/

K.சந்திரசேகரன்,B.Com.,B.L.,
வழக்கறிஞர்,சேலம்.

கனம் சிறப்பு சார்பு நீதிமன்றம் எண்.1, சேலம்.
**M.C.O.P.No. 386/2025**

கண்ணம்மாள்
க/பெ. ராமசந்திரன்
...மனுதாரர்

இடையே

G.தமிழரசன், த/பெ. கோவிந்தன்,
க.எண்.389, பாரப்பட்டி,
P.நாட்டாமங்களம்,
அமானிக்கொண்டலாம்பட்டி,
சேலம் - 636 010.
...எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரருக்கு சாலை விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்காக எதிர்மனுதாரர் ஆகிய தங்களுக்கு எதிராக தாக்கல் செய்த நஷ்டஈடு வழக்கானது **MCOP No. 386/2025** என்ற மனு வருகின்ற **20.11.2025** ம் தேதியில் கனம் சிறப்பு சார்பு நீதிமன்றம் எண்.1 ல் ஆஜராக வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி தேதியில் காலை 10.00 மணிக்கு எதிர்மனுதாரராகிய நீங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாவோல ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் மேற்படி உமக்கு எதிராக ஒருதலைபட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

/கோர்ட் உத்தரவுப்படி/

R.T.சரவணன், M.Sc.,B.L.,
வழக்கறிஞர், சேலம்.

சேலம் மாவட்ட சிறப்பு நீதிபதி நீதிமன்றம்.(SDJ)
**I.A.No. 744/2024 in I.A.No. 714/2021 in M.C.O.P.No. 2084/2019**

1. M.சுப்ரமணி
2. சாந்தா

...மனுதாரர்கள்/மனுதாரர்கள்

இடையே

ராஜீ, த/பெ. கோபால்,
க.எண்.44டி, முனியப்பன் கோவில் தெரு, கிச்சிப்பாளையம், சேலம் -15.
...1 ம் எதிர்மனுதாரர்
/ 1 ம் எதிர்மனுதாரர்

நீதிமன்ற அறிவிப்பு

மேற்படி மனுதாரர்களின் மகன் சாலை விபத்தில் இறந்தற்காக மனுதாரர்கள் இழப்பீடு கோரி தாக்கல் செய்த மனுவில் 1 ம் எதிர்மனுதாரர் ஆஜராவதற்கு வருகின்ற **04.11.2025** ம் தேதி அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு மேற்படி நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாவோ ஆஜராகி உங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறினால் மேற்படி வழக்கு தங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

/கோர்ட் உத்தரவுப்படி/

M.L.G.பகத்சிங்,B.Sc.,B.L.,
வழக்கறிஞர், சேலம்.

சேலம் மாவட்ட சிறப்பு நீதிபதி நீதிமன்றம்.(SDJ)
**I.A.No. 743/2024 in I.A.No. 714/2021 in M.C.O.P.No. 2084/2019**

1. M.சுப்ரமணி
2. சாந்தா

...மனுதாரர்கள்/மனுதாரர்கள்

இடையே

ராஜீ, த/பெ. கோபால்,
க.எண்.44டி, முனியப்பன் கோவில் தெரு, கிச்சிப்பாளையம், சேலம் -15.
...1 ம் எதிர்மனுதாரர்
/ 1 ம் எதிர்மனுதாரர்

நீதிமன்ற அறிவிப்பு

மேற்படி மனுதாரர்களின் மகன் சாலை விபத்தில் இறந்தற்காக மனுதாரர்கள் இழப்பீடு கோரி தாக்கல் செய்த மனுவில் 1 ம் எதிர்மனுதாரர் ஆஜராவதற்கு வருகின்ற **04.11.2025** ம் தேதி அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு மேற்படி நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாவோ ஆஜராகி உங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறினால் மேற்படி வழக்கு தங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

/கோர்ட் உத்தரவுப்படி/

M.L.G.பகத்சிங்,B.Sc.,B.L.,
வழக்கறிஞர், சேலம்.

மாண்பமை வணிக சார்பு நீதிமன்றம் (சீனியர் சிவில் நீதிபதி), சேலம்.
**C.O.S.No. 125/2025**

கனரா வங்கி, எருமாபாளையம் கிளை,
அதன் சார்பாக கிளை மேலாளர்.
...வாதி

/ Vs /

K.S.விஜயராஜ்
...பிரதிவாதி

பொது அறிவிப்பு மூலம் சம்மன்

பிரதிவாதி K.S.விஜயராஜ், த/பெ. சரவணன் என்பவர் வாதி வங்கியில் கடன் வாங்கினார். அப்பொழுது கொடுத்த முகவரி: 45/126, நெ.1, புதுத்தெரு, ரெங்கநாதன் தெரு, MGR மருத்துவமனை அருகில், கிச்சிப்பாளையம், சேலம் - 15. இந்த முகவரிக்கு நீதிமன்ற அழைப்பானை அனுப்பப்பட்டது. ஆனால் அந்த அழைப்பானையை சர்வு செய்ய முடியவில்லை அதனால் கனம் கோர்ட்டார் மாண்பமை வணிக சார்பு நீதிமன்றம் சேலம் அவர்கள் செய்தி தாள் வெளியீடு உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளார். ஆகவே வருகின்ற **28.11.2025** -ம் தேதி அன்று காலை 10.30 மணிக்கு மேல் குறிப்பிடப்பட்ட நீதிமன்றத்தின் முன் பிரதிவாதி நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகுமாறு இதன் மூலம் அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது. குறிப்பிடப்பட்ட அந்த நாள் மற்றும் மணிநேரத்திற்கு முன் உங்கள் தோற்றத்தின் இல்லையென்றால், நீங்கள் இல்லாத நேரத்தில் வழக்கு கேட்கப்பட்டு தீர்மானிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளுங்கள்.

/கோர்ட் உத்தரவுப்படி/

K.வேலாயுதம்,M.Sc.,M.L.,
வழக்கறிஞர்,சேலம்.

மாண்பமை முதன்மை சார்பு நீதிமன்றம், சேலம்.
**O.S.No. 1182/2024**

M/s.பேங்க் ஆப் பரோடா,
சேலம் பிரதான கிளை,
அதன் சார்பாக முதன்மை மேலாளர்.
...வாதி

/ Vs /

ஜெயசுதா
M/s. Niwad Senbaga Arali JLG
தலைவர் மற்றும் உறுப்பினர்
...பிரதிவாதி No.2

பொது அறிவிப்பு மூலம் சம்மன்

பிரதிவாதி எண். 2 ஜெயசுதா M/s. Niwad Senbaga Arali JLG தலைவர் மற்றும் உறுப்பினர் ஆனவர் மற்ற பிரதிவாதிகளுடன் இணைந்து வாதி வங்கியில் கடன் வாங்கினார். அப்பொழுது கொடுத்த முகவரி : 1/83, போயர் தெரு, பெரியகவுண்டபுரம், வாழப்பாடி, சேலம் - 636 106. இந்த முகவரிக்கு நீதிமன்ற அழைப்பானை அனுப்பப்பட்டது. ஆனால் அந்த அழைப்பானையை சர்வு செய்ய முடியவில்லை அதனால் கனம் கோர்ட்டார் மாண்பமை முதன்மை சார்பு நீதிமன்றம் சேலம் அவர்கள் செய்தி தாள் வெளியீடு உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளார். ஆகவே வருகின்ற **10.11.2025** -ம் தேதி அன்று காலை 10.30 மணிக்கு மேல் குறிப்பிடப்பட்ட நீதிமன்றத்தின் முன் பிரதிவாதி நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகுமாறு இதன் மூலம் அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது. குறிப்பிடப்பட்ட அந்த நாள் மற்றும் மணிநேரத்திற்கு முன் உங்கள் தோற்றத்தின் இல்லையென்றால், நீங்கள் இல்லாத நேரத்தில் வழக்கு கேட்கப்பட்டு தீர்மானிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளுங்கள்.

/கோர்ட் உத்தரவுப்படி/

K.வேலாயுதம்,M.Sc.,M.L.,
வழக்கறிஞர்,சேலம்.

# சேலம் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்: கலெக்டர் இரா.பிருந்தாதேவி தலைமையில் நடைபெற்றது



**சேலம்,நவ.01-**

சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, தலைமையில் (31.10.2025) நடைபெற்றது. இக்கூட்டத்தில், கலெக்டர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு அரசால் விவசாயிகளின் பொருளாதார மேம்பாட்டிற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வேளாண் உற்பத்திக்கு முக்கியத்துவம் அளித்து அரசு அறிவித்துச் செயல்படுத்தி வருகின்ற அனைத்துத் திட்டங்களையும் வேளாண் பெருமக்களுக்கு முழுமையாகக் கொண்டு சேர்ப்பதுடன் விவசாயிகளின் குறைகளை அனைத்துத் துறை அலுவலர்கள் அறிந்து நிவர்த்தி செய்யும் வகையில் மாதந்தோறும் இத்தகைய விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்படுகின்றன.

சேலம் மாவட்டத்தில் நடப்பு ஆண்டு இயல்பாக அக்டோபர் மாதம் முடிய பெய்ய வேண்டிய மழை அளவு 816.2 மி.மீ ஆகும். நடப்பு ஆண்டு தற்போது வரை 728.2 மி.மீ மழை பெய்துள்ளது. சேலம் மாவட்டத்தில் வேளாண்மை சாகுபடியைப் பொறுத்தவரை நெல், சோளம், மக்காச்சோளம், ராகி, நிலக்கடலை உள்ளிட்ட உணவு தானியங்கள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் உள்ளிட்ட வேளாண் பயிர்கள் 1,55,930 எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

சேலம் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களிலும் தேவையான அளவு உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. அந்தவகையில், யூரியா 2,427 மெட்ரிக் டன்னும், டிஏபி 2,588 மெட்ரிக் டன்னும், பொட்டாஷ் 1,273 மெட்ரிக் டன்னும், காம்ப்ளக்ஸ் 6,047 மெட்ரிக் டன்னும் என மொத்தம் 12,335 மெ.டன் இரசாயன உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. மேலும், 151.501 மெட்ரிக் டன் நெல் விதைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. அதேபோன்று, 105.083 மெட்ரிக் டன் சிறுதானிய விதைகளும், 95.569 மெட்ரிக் டன் விதை பயறு வகைகளும், 36.002 மெட்ரிக் டன் எண்ணெய் வித்துக்களும், 0.933 மெட்ரிக் டன் பருத்தியும் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து தேக்கு, வேம்பு, மாமரம், தென்னைமரம் உள்ளிட்ட கார்பன் டை ஆக்சைடை அதிகளவில் உறிஞ்சி கால நிலை மாற்றத்தை குறைத்து வளிமண்டலத்தை பாதுகாக்க உதவும் திட்டம் குறித்தும் அதன்மூலம் சேமிக்கப்படும் கார்பன் டை ஆக்சைடின் அளவை வைத்து விவசாயிகளுக்கான வருமானம் குறித்தும் இக்கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டது.

அதேபோன்று விவசாயிகளின் கோரிக்கை மனுக்களுக்கு தனிகவனம் செலுத்தி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அலுவலர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசின் திட்டங்களை விவசாயிகள் அறிந்து, நல்ல முறையில் பயன்படுத்தி, வேளாண் தொழிலை மேம்படுத்தி, விவசாயப் பொருட்களை அதிகளவில் உற்பத்தி செய்து, தங்கள் வாழ்வாதாரங்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு கலெக்டர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, தெரிவித்தார்.

விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தையொட்டி மாவட்ட ஆட்சியரக தரைதளத்தில் மரபுசார் விதைகள், வேளாண் உற்பத்தியாளர்கள் நிறுவனம் சார்பில் தயாரிக்கப்பட்ட உற்பத்திப் பொருட்கள், சிறுதானியங்கள் குறித்து விவசாயிகள் பயன்பெறும் வகையில் அரங்குகளும் அமைக்கப்பட்டிருந்தன.

இக்கூட்டத்தில், வேளாண்மை இணை இயக்குநர் சீனிவாசன், கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு. அர.பிரகாசம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ந.கமலம், தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் மஞ்சுளா உட்பட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் கலந்துகொண்டனர்.



**நாமக்கல் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் துர்காமூர்த்தி, தலைமையில் நடைபெற்றது.**

# தேசிய தன்னார்வ ரத்த தான தினத்தை முன்னிட்டு ஒருங்கிணைப்பாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள்

## கலெக்டர் ச.தினேஷ் குமார் வழங்கினார்



**கிருஷ்ணகிரி,நவ.01-**

கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், தேசிய தன்னார்வ இரத்ததான தினத்தை முன்னிட்டு, தேசிய தன்னார்வ இரத்ததான தின உறுதிமொழி கலெக்டர் ச.தினேஷ் குமார் தலைமையில், மருத்துவர்கள், அனைத்து துறை அலுவலர்கள் (31.10.2025) எடுத்துக் கொண்டனர். கலெக்டர் ச.தினேஷ் குமார் தெரிவித்ததாவது:

உயிர்காக்கும் குருதியை இலவசமாக வழங்கும் தன்னார்வ குருதி தானம் செய்வோரை சிறப்பிக்கவும், கௌரவப்படுத்தவும், நன்றி தெரிவிக்கும் விதமாக அக்டோபர் 1 ம் தேதியை உலக தன்னார்வ இரத்ததான தினமாக கடைபிடிக்கப்படுகிறது. அதன்படி, நமது மாவட்டத்தில் கடைபிடிக்கப்பட்டது. தேசிய தன்னார்வ இரத்ததான தின உறுதிமொழி:

இரத்தத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு, தன்னார்வ இரத்ததானம் செய்வதன் அவசியம் குறித்து, எனது குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், உறவினர்கள், சக ஊழியர்கள் மற்றும் பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவேன். ஒருவருக்கு இரத்தம் தேவைப்படும் போது எந்த வித நோக்கமும், பாகுபாடுமின்றி எந்த உயிர் இழப்பும் ஏற்படாதிருக்க தன்னார்வமாக இரத்த தானம் செய்வேன் என்ற உறுதிமொழியை அனைத்து துறை அலுவலர்களும் எடுத்துக்கொண்டனர்.

மேலும், உயிருக்கு ஆபத்தான நிலைகளிலும், சிக்கலான மருத்துவ சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சையின் கீழும் இருக்கும் இலட்சக்கணக்கான நோயாளிகள் இரத்தம் மற்றும் இரத்தப் பொருள் மாற்று சிகிச்சையால் காப்பாற்றப்படுகிறார்கள். தாய் மற்றும் குழந்தைப் பராமரிப்பிலும் மனிதனால் மற்றும் இயற்கையால் ஏற்படும் பேரிடங்களின் போதும் குருதிக் கொடைக்கு ஓர் உயிர் காக்கும் பங்கு உள்ளது. தன்னார்வ மற்றும் இலவசக் கொடையாளர்களால் மட்டுமே தொடர்ந்து இரத்தம் மற்றும் இரத்தப்பொருள் போதுமான அளவில் விநியோகம் செய்ய முடியும். நமது கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2024 -ம் ஆண்டில் 113 முகாம்கள் நடத்தப்பட்டு 9,500 யூனிட் இரத்தம் பெறப்பட்டுள்ளது. 12,500 யூனிட் இரத்தம் தேவைப்படுகிறது என கலெக்டர் ச.தினேஷ் குமார் தெரிவித்தார்.

தொடர்ந்து, கலெக்டர் 32 குருதி முகாம் ஒருங்கிணைப்பாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.சந்திரசேகர், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவர்கள் மரு. செல்வராஜ், மரு.மது, மரு.மமிதா, இரத்த வங்கி மைய அலுவலர் மரு.வசந்தகுமார், எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அலகு மண்டல திட்ட மேலாளர் பாலமுருகன், மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அலகு திட்ட மேற்பார்வையாளர் அருள் மற்றும் இரத்த வங்கி ஊழியர்கள், குருதி முகாம் ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road,
Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# ராசிபுரத்தில் டைட்டல் பூங்காவை வேறு புறம்போக்கு இடத்தில் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## முன்னாள் அமைச்சர் பி.தங்கமணி பேட்டி

**ராசிபுரம்,நவ.01-**

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் அருகே ஆண்டலூர் கேட்டில் அமைந்துள்ள திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி முன்பாக அதிமுக அமைப்புச் செயலாளரும், நாமக்கல் மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பி.தங்கமணி, எம்.எல்.ஏ., செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் தெரிவித்ததாவது,

இந்த அரசு கலைக்கல்லூரியில் சுமார் 3400 மாணவ மாணவிகள் படித்து வருகின்றனர். இதில் சுமார் 1000 பேர் விடுதியில் தங்கி உள்ளனர். இந்த கல்லூரி வளகத்தின் நடுப்பகுதியில் மினி டைட்டில் பூங்கா அமைக்க இந்த திமுக அரசு முடிவு செய்து அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அவ்வாறு அமைக்கப்பட்டால் கல்லூரி மாணவர்களுக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலை உருவாகும். டைட்டில் பூங்காவிற்கு பல பேர் வந்து செல்வார்கள் டைட்டில் பூங்கா அமைக்க வேண்டும் என்பதில் எங்களுக்கு எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. ஆகையால், ராசிபுரத்தில் டைட்டில் பூங்காவை வேறு அரசு புறம்போக்கு இடத்தில் அமைக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதையும் மீறி அரசு கட்டுமான பணியை தொடங்கினால், தலைமையின் அனுமதி பெற்று கூட்டணி கட்சியுடன் சேர்ந்து ஆர்ப்பாட்டம் நடத்தப்படும். அதையும் மீறி பணி நடைபெற்றால் நீதிமன்றம் மூலம் தடை ஆணை பெற நடவடிக்கை எடுக்கப்படும். இதேபோல் அதிமுக ஆட்சியில் குருக்கபுரத்தில் காவலர்களுக்கு வீடு கட்டுவதற்கு இடம் ஒதுக்கப்பட்டது. காவலர் கட்டிடத்துக்கு ஒதுக்கப்பட்ட இடத்தை தனியாருக்கு பட்டா போட திமுக அரசு முயற்சிக்கிறது. ராசிபுரம் நகரில் பேருந்து நிலையம் போதிய வசதியுடன் உள்ள நிலையில் சுயநலத்திற்காக திமுகவினர் புதிய பேருந்து நிலையத்தை ஊருக்கு வெளியில் அமைக்கின்றனர். மக்கள் விரோத அரசாக இந்த திமுக அரசு செயல்பட்டு வருகிறது. இவற்றையெல்லாம் இந்த அரசு கைவிட வேண்டும். இவ்வாறு முன்னாள் அமைச்சர் பி.தங்கமணி செய்தியாளர்களிடம் கூறினார். இந்த பேட்டின் போது மகளிர் அணி இணைச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான மருத்துவர் வெ.சரோஜா உட்பட பலர் உடன் இருந்தனர்.

# சோனா இயற்கை மருத்துவம் மற்றும் யோகா மருத்துவக் கல்லூரி முதலாம் ஆண்டு வகுப்புகள் துவக்க விழா



**சேலம்,நவ.01-**

சோனா கல்வி குழுமம், இயற்கை மருத்துவம் மற்றும் யோகா கல்வி ஆகியவற்றில் கவனம் செலுத்தும் விதமாக தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைகழகத்துடன் இணைந்து தமிழக அரசின் அங்கீகாரம் பெற்று BNYS இயற்கை மருத்துவம் மற்றும் யோகா அறிவியல் இளங்கலை படிப்பிற்கான முதலாம் ஆண்டு வகுப்புகள் துவக்க விழா கல்லூரியின் வளாகத்தில் நடைப்பெற்றது.

சோனா இயற்கை மருத்துவக் கல்லூரியின் மேலாண்மை அறங்காவலர் தியாகு வள்ளியப்பா முன்னிலையில் நடைபெற்ற விழாவிற்கு சோனா கல்விக் குழுமத்தின் தலைவர் வள்ளியப்பா தலைமை வகித்தார். கல்லூரியின் முதல்வர் டாக்டர். தர்மசம்வர்த்தினி விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்று பேசினார். முன்னதாக கல்லூரியின் முதலாமாண்டு மாணவ மாணவிகள், பெற்றோர்கள் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் குத்துவிளக்கேற்றி விழாவை தொடங்கி வைத்தனர்.

தலைமை விருந்தினராக சென்னை தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைகழகத்தின் துணைவேந்தர் டாக்டர் நாரயணசாமி கலந்து கொண்டு மாணவ மாணவிகளுக்கு வாழ்த்துகளை தெரிவித்தனர். சிறப்பு விருந்தினராக சேலம் மற்றும் நாமக்கல் ஆயுஷ் சுகாதாரப் பிரிவுகளின் நிர்வாகத் தலைவர் புகழேந்தி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். சோனா இயற்கை மருத்துவக் கல்லூரியின் மேலாண்மை அறங்காவலர் தியாகுவள்ளியப்பா பேசுகையில் சோனா கல்விக் குழுமம் தொழில்நுட்பம், கல்வி, விளையாட்டு, ஜவுளி, கட்டுமானம் போன்றவற்றின் மூலம் சமுதாய வளர்ச்சி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் திறன்பட செயல்படுவது போல் இந்திய நாட்டின் பாரம்பரியமிக்க இயற்கை மருத்துவ முறையை ஒவ்வொரு குடிமகனும் பயனடைய இந்த சோனா இயற்கை மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது என்றும் இதன் மூலம் மருத்துவத் துறையில் இந்திய அளவில் ஒரு பெரிய மாற்றத்தை உருவாக்கும் என்றும்

மேலும் சேலத்தில் 60 ஆண்டு பாரம்பரிய மிக்க எங்களது கல்வி நிறுவனம் தற்போது இயற்கை மருத்துவம் மற்றும் யோகா மருத்துவக் கல்லூரியை தொடங்கி 6 ஆண்டுகளாக சிறப்பாக பணியாற்றி வருகிறது. சமீப காலமாக இயற்கை மருத்துவம் மற்றும் யோகா கல்வி படிப்புகளுக்கும் நல்ல வரவேற்பு உள்ளது. எனவே இந்த வாய்ப்பினை பயன்படுத்திக்கொண்டு மருத்துவத் துறையில் மாணவர்கள் பல சாதனைகளை புரிய வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இறுதியாக கல்லூரியின் டீன் வசந்திபாலமுருகன் நன்றி உரையாற்றினார். இந்த விழாவில் சோனா கல்வி குழுமத்தின் இயக்குனர் கார்த்திகேயன், முதல்வர்கள் செந்தில்குமார், காதர்நவாஷ், கவிதா, சி.எம்.ஒ சன்சு சந்தீப் பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகள் பெற்றோர்கள் என பலர் பங்கேற்றனர்.

# தருமபுரி மாவட்ட வாக்குச்சாவடி நிலைய அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு

## கலெக்டர் ரெ.சதீஸ் ஆலோசனை வழங்கினார்



**தருமபுரி,நவ.01-**

தருமபுரி மாவட்டம், அதியமான் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் தருமபுரி சட்ட மன்ற தொகுதியின் வாக்காளர் பட்டியல்கள் சிறப்பு தீவிர திருத்தம்-2025 பணிகள் தொடர்பாக வாக்குச்சாவடி நிலைய அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் / கலெக்டர் ரெ.சதீஸ், (31.10.2025) பார்வையிட்டு, வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு அறிவுரைகளும் ஆலோசனைகளும் வழங்கினார்கள்.

இப்பயிற்சி வகுப்பனாது, 057-பாலக்கோடு சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி நிலைய அலுவலர்களுக்கு பாலக்கோடு வித்யா மந்திர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளிலும், 058-பென்னாகரம் சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி நிலைய அலுவலர்களுக்கு நல்லானூர் பகுதியில் உள்ள ஜெயம் மஹால் மற்றும் ஜெயம் கல்லூரியிலும், 059-தருமபுரி சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி நிலைய அலுவலர்களுக்கு அதியமான் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியிலும், 060-பாப்பிரெட்டிப்பட்டி சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி நிலைய அலுவலர்களுக்கு நடூர் பகுதியில் உள்ள AMG மெட்ரிக் பள்ளியிலும், 061-அரூர் (தனி) சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி நிலைய அலுவலர்களுக்கு அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியிலும் வாக்காளர் பட்டியல்கள் சிறப்பு தீவிர திருத்தம்-2025 பணிகள் தொடர்பாக வாக்குச்சாவடி நிலைய அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு முதல் தொடங்கி 03.11.2025 வரை நடைபெற உள்ளது. மேலும், 5 சட்ட மன்ற தொகுதிகளில் இன்றைய தினம் நடைபெற்ற வாக்காளர் பட்டியல்கள் சிறப்பு தீவிர திருத்தம்-2025 பணிகள் தொடர்பான பயிற்சி வகுப்பு சுமார் 1501 வாக்குச்சாவடி நிலைய அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

இப்பயிற்சி கூட்டத்தில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொள்ளும் பணி தொடர்பாக இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்களை பின்பற்றி சிறப்பாக செய்து முடிக்க உரிய அறிவுரைகளும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணியினை மேற்கொள்ளும் போது வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் எந்த ஒரு தகுதியான வாக்காளரையும் வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதில் இருந்து விடுபடக்கூடாது என்றும் தகுதியற்ற நபர்களை வாக்காளர்களாக சேர்க்கக்கூடாது எனவும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியில் தருமபுரி வருவாய் கோட்டாட்சியர் காயத்ரி, தருமபுரி வட்டாட்சியர் சௌகத்அலி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# பென்னாகரம் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் 7 ரேஷன் கடைகள்

## ஜி.கே. மணி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்



**தர்மபுரி,நவ.01-**

தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட, பருவதனஅள்ளி புதூர், கொட்டாயூர், பெரியதோட்டம் புதூர், பூதிப்பட்டி, மஞ்சநாயக்கனஅள்ளி, 5வது மைல், பெரியவத்தலாபுரம் ஆகிய ஊர்களுக்கு, பென்னாகரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து தலா 7 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 7 புதிய நியாய விலை கடை கட்டிடங்களை பென்னாகரம் சட்டமன்ற உறுப்பினர் ஜிகே மணி திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சிக்கு பென்னாகரம் வட்ட வழங்கல் அலுவலர் முல்லைக்கொடி, கூட்டுறவு சார் பதிவாளர் அம்பிகேஸ்வரி, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான நிரந்தர பகுதி நேர நியாய விலை கடை, தற்போது அமைத்து தரப்பட்டுள்ளதால் அந்த பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர். இந்நிகழ்ச்சியில் அரசு அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# காவேரிப்பட்டினத்தில் இந்திரா காந்தி நினைவு தினம் கடைபிடிப்பு

**கிருஷ்ணகிரி,நவ.01-**

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினத்தில் கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் முன்னாள் பாரத பிரதமர் அன்னை இந்திரா காந்தியின் நினைவு தினம் கடைப்பிடிக்கப்பட்டது. காவேரிப்பட்டினம் பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலையம் அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டு இருந்த அன்னை இந்திரா காந்தியின் திரு உருவப்படத்திற்கு காங்கிரஸ் கட்சியின் மாநில பொதுக்குழு உறுப்பினரும், முன்னாள் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவருமான எல் சுப்பிரமணியன் கலந்துக் கொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

பின்னர் பயங்கரவாத உறுதிமொழி எடுத்துக் கொண்டதோடு நாடு நலம் பெற இளம் தலைவர் ராகுல்காந்தி தலைமையிலான நல்லாட்சி அமைந்திட நாம் அனைவரும் ஒன்றுனைந்து செயல்பட வேண்டும் என்று உறுதி மொழியும் எடுத்துக் கொள்ளப்பட்டது. காங்கிரஸ் கட்சியின் வட்டார பொறுப்பாளர் மாரியப்பன் தலைமையில் நடைப்பெற்ற இந்த நினைவு நாள் கூட்டத்திற்கு வட்டார பொறுப்பாளர் பாக்கியராஜ், தங்கையா, முன்னாள் கவுன்சிலர் சுப்பிரமணி, முன்னாள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் முத்து , நகர தலைவர் ஸ்ரீராம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்,

மேலும் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த சிறுபான்மை பிரிவு தலைவர் முஸ்தப்பா, மாவட்ட துணைத் தலைவர் சத்திவேல், கலைப் பிரிவு மாவட்ட துணைத் தலைவர் தேவேந்திரன் மற்றும் நகர நிர்வாகிகளான தினேஷ் கௌதம், பாலு உள்ளிட்ட பலர் கலந்துக் கொண்டு அன்னை இந்திரா காந்தியின் திரு உருப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

# ஊத்தங்கரை அருகே யுனிக் கல்லூரிக்கு சிறந்த ரத்ததான சேவைக்கான பாராட்டு சான்றிதழ்

## கலெக்டர் தினேஷ்குமார் வழங்கினார்



**கிருஷ்ணகிரி,நவ.01-**

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அடுத்த காரப்பட்டு அருகே உள்ள யுனிக் கல்லூரியில் நாட்டு நலப்பணி திட்டம் சார்பாக பல்வேறு முகாம்கள் மற்றும் நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இதில் 2024-2025 ஆம் கல்வியாண்டில் யுனிக்

கல்லூரி சார்பில் மாவட்ட அளவில் ரத்ததான முகாம் நடந்தது, சிறந்த இரத்ததான முகாம் நடத்தியமைக்கு

கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் ச.தினேஷ்குமார் சிறந்த இரத்ததான சேவைக்கான பாராட்டு சான்றிதழை கல்லூரியின் நாட்டு நலப்பணி திட்ட ஒருங்கிணைப்பாளர் இரா. மோகனா வேதியியல் துறை பேராசிரியரிடம் வழங்கி பாராட்டினார்.

# திருக்குறள் திருப்பணிகள் பயிற்சி வகுப்பு 10-வது வாரம் நடைபெற்றது

**ராசிபுரம்,நவ.01-**

திருக்குறள் திருப்பணிகள் பயிற்சி வகுப்பு ராசிபுரம் பாரதிதாசன் சாலையில் உள்ள நகராட்சி நடுநிலைப் பள்ளியில் 10-வது வாரமாக நடைபெற்றது. ராசிபுரம் தமிழ் கழகத்தின் செயலாளர் பள்ளி துணை ஆய்வாளருமான முனைவர் கை.பெரியசாமி தலைமை தாங்கினார். அவரது தலைமை உரையில் "வள்ளுவன் தன்னை உலகினுக்கு தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு" என்னும் பாரதியின் பாடல் வரிகளுடன் வள்ளுவத்தின் மாண்பினை உணர்ந்த அருட்பிரகாச வள்ளலார் முதன் முதலில் திருக்குறளுக்கு வகுப்பெடுத்ததையும் எண்ணிப் பார்க்கிறேன். திருக்குறளுக்கு பல்வேறு சிறப்புகள் உண்டு குறளால் ஆன பழைய நூல் இது. ஒன்றுதான் தமிழின் முதல் எழுத்தாகிய அகரத்தில் தொடங்கி இறுதி எழுத்தாகியதின் என்பதில் நூல் முடிவடைகிறது என்றார். இதில் ராசிபுரம் நகராட்சி நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர் கு.பாரதி, முதன்மைக் கருத்தாளர் தட்சிணாமூர்த்தி, வாகை மனோஜ்குமார், தமிழ்க் கழகத்தின் பொருளாளர் வீ.ரீகன், இணை செயலாளர் மா.இருசப்பன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ராசிபுரம் தமிழ்க் கழகத்தின் தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் சுதாகர் நன்றி கூறினார்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

### ஒருநாள் போட்டியில் அதிகபட்ச

# ஸ்கோரை சேஸிங் செய்த அணி: இந்திய மகளிர் அணி சாதனை



**மும்பை, நவ. 01-**

ஒருநாள் போட்டிகளில் இதுவரையிலான அதிகபட்சமாக துரத்திப் பிடிக்கப்பட்ட இலக்காக இருந்தது. தற்போது 339 ரன்கள் இலக்கை எட்டிப்பிடித்து ஆஸ்திரேலிய அணியின் சாதனையை முறியடித்து இந்திய அணி சேஸிங்கில் புதிய வரலாறு படைத்துள்ளது.

**ஆஸ்., பேட்டிங்...**

ஐ.சி.சி. மகளிர் ஒருநாள் உலகக்கோப்பைத் தொடரில் நவி மும்பையில் (அக்டோபர் 30) நடைபெற்ற 2-வது அரையிறுதிப் போட்டியில் இந்தியா மற்றும் ஆஸ்திரேலிய அணிகள் விளையாடின. இந்தப் போட்டியில் டாஸ் வென்ற ஆஸ்திரேலிய அணி பேட்டிங்கைத் தேர்வு செய்து முதலில் விளையாடியது. முதலில் விளையாடிய ஆஸ்திரேலிய அணி 49.5 ஓவர்களில் 338 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தது. அந்த அணியில் அதிரடியாக விளையாடிய ஃபோப் லிட்ச்ஃபீல்டு சதம் விளாசி அசத்தினார். அவர் 93 பந்துகளில் 119 ரன்கள் எடுத்தார்.

**ஸ்ரீ சரணி - தீப்தி...**

அதில் 17 பவுண்டரிகள் மற்றும் 3 சிக்ஸர்கள் அடங்கும். அவரைத் தொடர்ந்து, எல்லிஸ் பெரி 77 ரன்களும் (6 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள்), ஆஷ்லே கார்டனர் 63 ரன்களும் (4 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள்) எடுத்தனர். பெத் மூனி 24 ரன்கள் எடுத்தார். இந்தியா தரப்பில் ஸ்ரீ சரணி மற்றும் தீப்தி சர்மா தலா இரண்டு விக்கெட்டுகளைக் கைப்பற்றினர். கிராந்தி கௌத், அமன்ஜோத் கௌர் மற்றும் ராதா யாதவ் தலா ஒரு விக்கெட்டினைக் கைப்பற்றினர்.

**339 ரன்கள் இலக்கு...**

பின்னர், 339 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி 48.3 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 341 ரன்கள் எடுத்து அபார வெற்றிபெற்றது. இந்திய அணியில் அதிகபட்சமாக ஜெமிமா ரோட்ரிக்ஸ் 127* (14 பவுண்டரிகள்) ரன்களும், கேப்டன் ஹர்மன்ப்ரீத் கௌர் 89 ரன்களும்(10 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள்), ரிச்சா கோஷ் 26 ரன்களும், தீப்தி 24 ரன்களும் எடுத்தனர். ஆஸ்திரேலிய அணித் தரப்பில் கிம் கார்த், சதர்லாண்ட் இருவரும் தலா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

**அதிகபட்ச ஸ்கோர்...**

லீக் சுற்றில் இந்திய அணிக்கு எதிரான போட்டியில் 331 ரன்கள் என்ற இலக்கை ஆஸ்திரேலிய அணி விரட்டிப் பிடித்திருந்ததே ஒருநாள் போட்டிகளில் இதுவரையிலான அதிகபட்சமாக துரத்திப் பிடிக்கப்பட்ட இலக்காக இருந்தது. தற்போது 339 ரன்கள் இலக்கை எட்டிப்பிடித்து ஆஸ்திரேலிய அணியின் சாதனையை முறியடித்து இந்திய அணி சேஸிங்கில் புதிய வரலாறு படைத்துள்ளது. இந்திய அணி வருகிற ஞாயிற்றுக்கிழமை(நவ.2) மும்பையில் நடைபெறும் இறுதிப்போட்டியில் தென்னாப்பிரிக்க அணியை எதிர்கொள்ளவிருக்கிறது.

### நாக் அவுட் போட்டிகளில்....

ஐ.சி.சி. உலக கோப்பை வரலாற்றில், நாக் அவுட் போட்டிகளில் முதல் முறையாக 300+ ரன்களை சேஸிங் செய்த அணி என்ற புதிய சாதனையை இந்திய மகளிர் அணி படைத்துள்ளது. இதற்கு முன்பு கடந்த 2015-ம் ஆண்டு நடைபெற்ற உலககோப்பை அரையிறுதியில் தென்னாப்பிரிக்காவுக்கு எதிராக 298 ரன்களை நியூசிலாந்து ஆண்கள் சேஸிங் செய்து இருந்தது குறிப்பிடத்தக்கது.

### ஜாம்பவான்கள் புகழாரம்

இந்திய மகளிரணிக்கு வாழ்த்து தெரிவித்த சச்சின் டெண்டுல்கர், ``இந்திய அணியை முன்னின்று வழிநடத்திய ஜெமிமா ரோட்ரிக்ஸ் மற்றும் கேப்டன் ஹர்மன்ப்ரீத் கௌருக்கும், விளையாட்டை உயிர்ப்புடன் வைத்திருந்த ஸ்ரீ சரணி மற்றும் தீப்தி சர்மாவுக்கும் வாழ்த்துகள். இந்திய அணியை மென்மேலும் வெற்றிபெறச் செய்யவும்'' என்று பதிவிட்டுள்ளார்.

விராட் கோலியின் எக்ஸ் பக்கத்தில், ``ஆஸ்திரேலியா போன்ற ஒரு வலிமையான எதிரணியை நமது அணி வென்றது - எவ்வளவு பெரிய வெற்றி. பெண்களின் சிறந்த ஆட்டம், ஜெமிமாவின் தனித்துவமான செயல்திறன். இந்த ஆட்டமானது, மனவலிமை, நம்பிக்கை மற்றும் ஆர்வத்தின் வெளிப்பாடு. இந்திய அணிக்கு வாழ்த்துகள்'' என்று வாழ்த்து தெரிவித்துள்ளார்.

### 2-வது டி-20 போட்டியில்

# இந்தியாவை வீழ்த்தியது ஆஸி.,

**மெல்போர்ன், நவ. 01-**

2-வது டி-20 போட்டியில் இந்தியாவை வீழ்த்தியது ஆஸ்திரேலியா வெற்றி பெற்றது. இதன்மூலம் 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் ஆஸ்திரேலியா 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

**ஆரம்பமே தடுமாற்றம்...**

ஆஸ்திரேலியா - இந்தியா அணிகளுக்கு இடையேயான ஐந்து போட்டிகள் கொண்ட டி20 தொடரின் 2-வது போட்டி, மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இதில் டாஸ் வென்ற ஆஸ்திரேலிய அணி பந்து வீச்சை தேர்வு செய்தது. அதன்படி இந்திய அணியின் தொடக்க வீரர்களாக சுப்மன் கில்- அபிஷேக் சர்மா களமிறங்கினர். முதல் ஓவரில் சுப்மன் கில் 6 பந்துகள் சந்தித்து 1 ரன் மட்டுமே எடுத்தார். அதனை தொடர்ந்து 10 பந்துகளில் 5 எடுத்த நிலையில் அவர் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த சஞ்சு சாம்சன் 2 ரன்னிலும் கேப்டன் சூர்யகுமார் யாதவ் 1 ரன்னிலும் திலக் வர்மா டக் அவுட்டிலும் நடையை கட்டினார். இதனால் பவர் பிளேயில் இந்திய அணி 40 ரன்களுக்கு 4 முக்கிய விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

**அபிஷேக் சர்மா...**

இதனையடுத்து அபிஷேக் சர்மாவுடன் அக்சர் படேலும் நிதானமாக விளையாடினர். இதில் அக்சர் படேல் தேவையில்லாமல் ரன் அவுட் ஆகி வெளியேறினார். ஹர்ஷித் ராணா - அபிஷேக் சர்மா ஜோடி நல்ல பார்ட்னர்ஷிப் அமைத்து ஸ்கோரை கணிசமாக உயர்த்தினர். அதிரடியாக விளையாடிய அபிஷேக் அரைசதம் அடித்து அசத்தினார். ராணா 35 ரன்னில் ஆட்டமிழந்தார். அடுத்த வந்த துபே 4 ரன்னில் வெளியேறினார். ஒருமுனையில் போராடிய அபிஷேக் 68 ரன்னில் அவுட் ஆனார். இதனால் இந்திய அணி 18.4 ஓவரில் 125 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. ஆஸ்திரேலியா தரப்பில் ஹேசில்வுட் 3 விக்கெட்டும் எல்லிஸ் 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

**டிராவிஸ்-மார்ஷ்...**

இந்திய அணியில் அபிஷேக் சர்மா, ராணா இவர்களை தவிர மற்ற எந்த வீரரும் இரட்டை இலக்க ரன்களை எடுக்கவில்லை. இதனை தொடர்ந்து ஆஸ்திரேலிய அணியின் தொடக்க வீரர்களாக டிராவிஸ் ஹெட்- மிட்செல் மார்ஷ் களமிறங்கினர். இருவரும் அதிரடியாக விளையாடி ரன்களை குவித்தனர். 28 ரன்கள் இருக்கும் போது டிராவிஸ் ஹெட் அவுட் ஆனார். அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய மார்ஷ் 46 ரன்னில் அவுட் ஆகி முந்தார். அவர் குல்தீப் யாதவின் ஒரே ஓவரில் 20 ரன்கள் குவித்து அதே ஓவரில் அவுட்டமிழந்தார்.

**1-0 என்ற கணக்கில்...**

அதனை தொடர்ந்து டிம் டேவிட் 1, இங்கிலீஸ் 20, என விக்கெட்டுகளை இழந்தனர். அதனை தொடர்ந்து ஆஸ்திரேலியா வெற்றிக்கு 2 ரன்கள் தேவைப்பட்ட நிலையில் 14, ஷார்ட் 0 என அடுத்தடுத்து பும்ரா வீசிய பந்தில் விக்கெட்டுகளை இழந்தனர். இறுதியில் ஆஸ்திரேலியா 6 விக்கெட்டுகளை இழந்து 125 ரன்கள் எடுத்து 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்திய தரப்பில் வருண், குல்தீப், பும்ரா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை கைப்பற்றினர். இதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் ஆஸ்திரேலியா 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. இரு அணிகளுக்கும் இடையேயான 3-வது போட்டி வரும் நவம்பர் 2-ந் தேதி நடக்கவுள்ளது.

# ஓய்வு குறித்து அலிசா சூசகம்



ஐசிசி மகளிர் ஒருநாள் உலகக் கோப்பைத் தொடரின் நவி மும்பையில் (அக். 30) நடைபெற்ற 2-வது அரையிறுதிப் போட்டியில் ஆஸ்திரேலிய அணியை வீழ்த்தி இந்திய அணி மூன்றாவது முறையாக இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்றது. அதிரடியாக விளையாடிய ஜெமிமா ரோட்ரிக்ஸ் சதம் விளாசி இந்திய அணிக்கு வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார். தோல்விக்குப் பிறகு ஆஸ்திரேலிய அணி கேப்டன் அலிசா ஹீலி பேசுகையில், "இந்தத் தொடர் முழுவதுமே எல்லாருமே சிறப்பாக பங்களித்ததாக நினைக்கிறேன். அதனால்தான் தற்போது இங்கு நிற்பது மிகவும் ஏமாற்றமளிக்கிறது. நாங்கள் எங்களால் முடிந்தவரை செய்தோம். போட்டியில் அழுத்தத்தை ஏற்படுத்தினோம். வாய்ப்புகளையும் உருவாக்கினோம். ஆனால், அவற்றை பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை" என்றார். அடுத்த உலகக் கோப்பையில் விளையாடுவீர்களா? என்ற கேள்விக்கு பதிலளித்த 35 வயதான அலிசா ஹீலி, "நான் அங்கு இருக்கமாட்டேன். அடுத்தச் சுற்றுக்கு அதுதான் அழகு. அடுத்தகட்டத்தின் நடுப்பகுதியில் டி20 உலகக் கோப்பை நடைபெறவிருக்கிறது. எங்கள் அணியினருக்கு மிகவும் உற்சாகமாகவுள்ளது. ஆனால், ஒருநாள் கிரிக்கெட் அணியில் சில மாற்றங்கள் ஏற்படலாம்" என ஓய்வு முடிவு குறித்து சூசகமாக தெரிவித்தார்.

## இளம்பரிதிக்கு முதல்வர் வாழ்த்து

தமிழ்நாட்டின் 35 ஆவது செஸ் கிராண்ட் மாஸ்டராக உருவெடுத்துள்ள ஏ.ஆர். இளம்பரிதிக்கு, முதல்வர் மு.க. ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். போஸ்னியா மற்றும் ஹெர்சகோவினா நாட்டில் நடைபெற்ற பிஜெல்ஜினா ஓபன் செஸ் போட்டியில் வெற்றி பெற்று, இந்தியாவின் 90 ஆவது கிராண்ட் மாஸ்டராகவும் தமிழ்நாட்டின் 35 ஆவது கிராண்ட் மாஸ்டராகவும் சென்னையைச் சேர்ந்த ஏ.ஆர். இளம்பரிதி (வயது 16) தேர்வாகியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து, அவரது இந்தச் சாதனைக்கு, தமிழ்நாட்டின் துணை முதல்வரும், விளையாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் தனது எக்ஸ் தளப் பக்கத்தில் வாழ்த்து தெரிவித்திருந்தார். இந்த நிலையில், கிராண்ட் மாஸ்டர் இளம்பரிதிக்கு தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் தனது எக்ஸ் தளப் பக்கத்தில் வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுகுறித்த, அவரது பதிவில், ''வரலாற்றில் இளம்பரிதி தனது திறமையை வெளிப்படுத்தி, பட்டத்தைப் பெற்று தமிழ்நாட்டின் சாம்பியன் கிரீடத்தில் மற்றொரு ரத்தினத்தைச் சேர்த்துள்ளார்'' எனப் புகழாரம் சூட்டியுள்ளார். மேலும், தமிழ்நாடு சதுரங்கத்தில் சூரியன் உதிக்கும்போது, இன்னும் பல கிராண்ட் மாஸ்டர்கள் உருவாகி வருவதாகவும், முதல்வர் மு.க. ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

## கருப்புபட்டை அணிந்திருந்த வீரர்கள்

ஆஸ்திரேலியா - இந்தியா அணிகளுக்கு இடையேயான 2-வது டி-20 போட்டியில், கேப்டன்கள் சூர்யகுமார் யாதவ் மற்றும் மிட்செல் மார்ஷ் உட்பட இரு அணி வீரர்களும் தங்களது கைகளில் கருப்புப் பட்டை அணிந்து களமிறங்கியுள்ளனர். ஏனென்றால் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த 17 வயது இளம் கிரிக்கெட் வீரரான பென் ஆஸ்டின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாகவும், அவரது குடும்பத்தினருக்குத் தங்கள் இரங்கலைத் தெரிவிக்கும் வகையிலும் இரு அணி வீரர்களும் கருப்புப் பட்டை அணிந்து விளையாடுகின்றனர்.

மெல்போர்னைச் சேர்ந்த 17 வயது இளம் வீரரான பென் ஆஸ்டின், ஃபெர்ன்ட்ரீ கல்லி கிரிக்கெட் கிளப் வலைப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது அவரது கழுத்துப் பகுதியில் அதிவேகமாகத் தாக்கியது. இதில் படுகாயமடைந்த அவர், உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு, 2 நாட்கள் தீவிர சிகிச்சை அளித்தும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இந்த போட்டியில் மட்டுமில்லாமல் நேற்று நவி மும்பையில் நடைபெற்ற மகளிர் உலகக் கோப்பை அரையிறுதிப் போட்டியிலும், ஆஸ்திரேலிய மகளிர் அணி வீராங்கனைகள் பென் ஆஸ்டினின் நினைவாகக் கருப்புப் பட்டைகளை அணிந்து விளையாடினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜெமிமாவின புகைப்படம் வைரல்




மகளிர் உலக கோப்பை அரையிறுதிப் போட்டியில் நடப்பு சாம்பியன் ஆஸ்திரேலியாவை அதிரடியாக வீழ்த்தி இந்திய அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. இந்திய அணி 48.3 ஓவர்களில் 5 விக்கெட்டுக்கு 341 ரன்கள் குவித்து 5 விக்கெட் வித்தியாசத்தில் சூப்பரான வெற்றியோடு 3-வது முறையாக இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது. இந்த போட்டியில் ஜெமிமா ரோட்ரிக்ஸ் 127 ரன்கள் விளாசி அணியின் வெற்றிக்கு வித்திட்டார். அவரை பலரும் பாராட்டி வருகின்றனர். அவரது புகைப்படம் மற்றும் அவரது தந்தையுடன் வெற்றியை கொண்டாடிய புகைப்படம் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

அந்த வகையில் இந்திய அணியின் முன்னாள் கேப்டனும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் முன்னாள் கேப்டனான எம் எஸ் தோனியிடம் ஜெமிமா வெற்றி கோப்பையை வாங்கும் சிறிய வயது புகைப்படம் தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. ஆட்டத்தை இறுதிவரை கொண்டு சென்று முடிப்பதில் வல்லவரான எம்எஸ் தோனியுடன் மகளிர் அணியின் பினிஷர் என ரசிகர்கள் கருத்துகளை தெரிவித்து வருகின்றனர்.

### த.வெ.க. கூட்ட நெரிசல் விவகாரம்:

# சம்பவத்தை பார்த்தவர்களிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை

**கரூர், நவ. 01**

கரூர் வேலுசாமிபுரத்தில் த.வெ.க. பிரச்சாரக் கூட்டத்தில் 41 பேர் உயிரிழந்த இடத்தை சி.பி.ஐ. அதிகாரிகள் பார்வையிட்டு விசாரணை மேற்கொண்டனர். மேலும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்களிடம் விசாரணை நடைபெற்றது.

கரூர் வேலுசாமிபுரத்தில் கடந்த செப். 27-ம் தேதி நடந்த த.வெ.க. பிரச்சாரக் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். 100-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இவ்வழக்கை கரூர் நகர போலீஸார் விசாரித்த நிலையில் உயர்நீதிமன்றம் அக். 3-ம் தேதி சிறப்பு புலனாய்வுக்குழு அமைத்து உத்தரவிட்டது.

அக். 5-ம் தேதி முதல் சிறப்பு புலனாய்வுக்குழு விசாரணை நடத்தி வந்த நிலையில், உச்ச நீதிமன்றம் அக்.13-ம் தேதி இவ்வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்றி உத்தரவிட்டது. இதையடுத்து அக். 16-ம் தேதி கரூர் வந்த சி.பி.ஐ.யினரிடம் அக். 17-ம் தேதி எஸ்ஐடி வழக்கு ஆவணங்களை ஒப்படைத்தது.

அக். 19-ம் தேதி தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சொந்த ஊர்களுக்கு சென்றிருந்த சி.பி.ஐ. அதிகாரிகள் 2 கார்களில் கரூர் சுற்றுலா மாளிகைக்கு திரும்பினர். கரூர் நகர இன்ஸ்பெக்டர் மணிவண்ணன் ஆவணங்களுடன் கரூர் சுற்றுலா மாளிகையில் உள்ள சி.பி.ஐ. அதிகாரிகள் முன் ஆஜரரானார்.

அவரிடம் சுமார் 1 மணி நேரத்திற்கு மேலாக சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை நடத்தினர். 41 பேர் உயிரிழந்த வேலுசாமிபுரம் கரூர் நகர காவல் எல்லைக்குட்பட்ட பகுதி என்பதால் கரூர் நகர இன்ஸ்பெக்டர் மணிவண்ணனிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று (அக். 31ம் தேதி) காலை சுமார் 10.30 மணிக்கு கரூர் சுற்றுலா மாளிகையில் இருந்து புறப்பட்ட சி.பி.ஐ. அதிகாரிகள், சம்பவம் நடந்த கரூர் வேலுசாமிபுரத்தை பார்வையிட்டனர். எஸ்.பி. பிரவீண்குமார், ஏஎஸ்பி முகேஷ்குமார் உள்ளிட்ட 10-க்கும் மேற்பட்டவர்கள் உடனிருந்தனர். கரூர் டிஎஸ்பி செல்வராஜ், இன்ஸ்பெக்டர் மணிவண்ணன் ஆகியோரிடம் சம்பவம் குறித்து விசாரணை மேற்கொண்டனர்.

மேலும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்களிடம் விசாரணை நடைபெற்றது. சி.பி.ஐ. விசாரணை காரணமாக அப்பகுதியில் போக்குவரத்து தடை செய்யப்பட்டு, தடுப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. விசாரணை நடத்திய 4 பேர் கோட் அணிந்திருந்தனர். அதன் பின்பகுதியில் சி.பி.ஐ. என ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது. விசாரணையின்போது ஃபோட்டோ கேமரா, வீடியோ கேமரா, டிரைபேடுகள், சிடி ஸ்கேனர் கருவி ஆகியவை பயன்படுத்தப்பட்டன.

கரூர் கூட்ட நெரிசல் ஏற்பட்ட பகுதியில் சி.பி.ஐ. அதிகாரிகள் தொடர்ந்து 5 மணிநேரமாக விசாரணை நடத்தினர். கூட்ட நெரிசல் ஏற்பட்ட பகுதியில் 500 மீட்டர் தூரத்திற்கு கயிறுகள் மூலம் தடுப்புகள் ஏற்படுத்தியும், 3டி டிஜிட்டல் ஸ்கேனர்கள் மூலம் அளவீடு செய்தும் அதிகாரிகள் விசாரணை நடத்தினர். சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை நடத்தி வரும் நிலையில் அப்பகுதியில் மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடி காணப்பட்டது. முன்னதாக சம்பவம் நடந்த இடத்தில் இருந்த போட்டோ, வீடியோகிராபர்கள், வியாபாரிகள், பொதுமக்கள் ஆகியோரிடம் கரூர் சுற்றுலா மாளிகையில் சி.பி.ஐ.யினர் விசாரணை மேற்கொண்டனர்.

### ஆசிய ஜூனியர் சாம்பியன்ஷிப்:

# தங்கம் வென்ற வீராங்கனைக்கு 5 லட்சம் ரூபாய் ஊக்கத்தொகை

## துணை முதல்வர் உதயநிதி வழங்கி வாழ்த்து

சென்னை, நவ.01-

சீனாவில் நடைபெற்ற போட்டியில், இந்தியாவின் முதல் தங்கப் பதக்கம் வென்ற தமிழக வீராங்கனைக்கு ரூ. 5 லட்சம் ஊக்கத்தொகையை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:- தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சீனாவில் நடைபெற்ற பேட்மிண்டன் ஆசிய ஜூனியர் சாம்பியன்ஷிப் 2025 போட்டியில், இந்தியாவின் முதல் தங்கப் பதக்கத்தை வென்று வரலாற்று சாதனை படைத்துள்ள தமிழ்நாட்டின் வீராங்கனை எஸ்.ஆர். தீக்ஷாவுக்கு ரூ. 5 லட்சத்திற்கான ஊக்கத்தொகை காசோலையை வழங்கினார்.

தமிழ்நாடு முதல்வர் விளையாட்டுத் துறையில் தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உருவாக்கும் வகையில் பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகின்றார். விளையாட்டு வீரர்களுக்கு 3 சதவீத இட ஒதுக்கீடு அளித்து பல்வேறு அரசுத்துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணி நியமனம் செய்து வருகின்றார்.

தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவித்தொகை திட்டத்தின் கீழ் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஊக்கத் தொகை 25 லட்சம் ரூபாயை 30 லட்சம் ரூபாயாக உயர்த்தியதோடு இத்திட்டத்தில் பயன் பெறும் பயனாளிகளின் எண்ணிக்கையை 12 லிருந்து 50 ஆக உயர்த்தியுள்ளார். மேலும் சர்வதேச அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் பெறுவதற்கான ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் உள்ள விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்பட்டு வந்து நிதியுதவியை 10 லட்சம் ரூபாயிலிருந்து இருந்து 12 லட்சம் ரூபாயாக உயர்த்தியதோடு, தற்போது பயன்பெறும் விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கையை 125 ஆக உயர்த்தியுள்ளார்.

மேலும், தமிழ்நாடு முழுவதும் புதிய மாவட்ட விளையாட்டு அரங்கங்கள், உலக தரத்திலான உள் அரங்க விளையாட்டு மைதானங்கள், முதல்-அமைச்சர் சிறிய விளையாட்டு அரங்கங்கள், ஒலிம்பிக் தரத்திலான ஹாக்கி மைதானங்கள், விளையாட்டு வீரர்கள் உலகத் தரத்திலான பயிற்சி பெறுவதற்காக நுங்கம்பாக்கம் டென்னிஸ் மைதானம், நேரு விளையாட்டு அரங்கத்தில் உள்ள கூடை பந்து, வாலிபால் பந்து மைதானங்களில் தானியங்கி முறையில் பந்து எறியும் அதிநவீன இயந்திரங்கள் என விளையாட்டு கட்டமைப்புகளை மேம்படுத்தி வருகின்றார்.

கடந்த ஒருவார காலமாக, செஸ் போட்டியில் கிராண்ட் மாஸ்டர், பஹ்ரைனில் நடைபெற்ற மூன்றாவது ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில், கபடி, தடகளப் போட்டிகள், பளுதூக்கும் போட்டி, நான்காவது தெற்காசிய சீனியர் தடகளப் போட்டிகள், ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற பாரா பேட்மிண்டன் போட்டி என தொடர்ந்து, தினந்தோறும் தமிழ்நாட்டு வீரர், வீராங்கனைகள் பதக்கங்களை குவித்து வருகின்றனர்.

அதனடிப்படையில், 2025 அக்டோபர் 21 முதல் 26 வரை சீனாவில் நடைபெற்ற பேட்மிண்டன் ஆசிய ஜூனியர் சாம்பியன்ஷிப் 2025 போட்டியில், ஒற்றையர் பிரிவில் இந்தியாவிற்கான முதல் தங்கப் பதக்கத்தை வென்று வரலாற்று சாதனை படைத்துள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சாம்பியன்ஸ் மேம்பாட்டுத் திட்ட திருவள்ளூர் மாவட்ட வீராங்கனை எஸ்.ஆர். தீக்ஷாவுக்கு தமிழ்நாடு துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று (31.10.2025) வாழ்த்து தெரிவித்து, 5,00,000 ரூபாய்க்கான ஊக்கத்தொகை காசோலையை வழங்கினார். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இந்திய அணியின் முன்னாள் கேப்டன்

# அசாருதீன் தெலுங்கானா மாநில புதிய அமைச்சராக பதவியேற்பு

**ஐதராபாத், நவ. 01-**

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் முகமது அசாருதீன் தெலுங்கானா அமைச்சராக பதவியேற்றார்.



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் முகமது அசாருதீன். இவர் 2009ம் ஆண்டில் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார். கட்சியின் பல்வேறு பொறுப்புகளிலும் அவர் பணியாற்றியுள்ளார். இதனிடையே, தெலுங்கானாவில் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்று வருகிறது. அம்மாநில முதல்வராக ரேவந்த் ரெட்டி செயல்பட்டு வருகிறார். அதேவேளை, தெலுங்கானாவில் மாநில மந்திரி சபை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், மந்திரி சபையில் முகமது அசாருதீனுக்கு இடம் அளிக்கப்பட்டுள்ளது. நியமன அமைச்சராக முகமது அசாருதீன் இடம்பெற்றுள்ளார். தெலுங்கானா அமைச்சராக அசாருதீன் நேற்று பதவியேற்றுள்ளார். கடந்த 2023 சட்டசபை தேர்தலில் ஜூபிலி ஹில்ஸ் தொகுதியில் போட்டியிட்ட அசாருதீன் தோல்வியடைந்தார். தற்போது அந்த தொகுதிக்கு இடைத்தேர்தல் நடைபெற உள்ள நிலையில் மீண்டும் அதே தொகுதியில் காங்கிரஸ் சார்பில் அசாருதீன் களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் இடைத்தேர்தலில் தொகுதியை கைப்பற்ற அசாருதீனுக்கு மந்திரி சபையில் இடம் கொடுக்கப்பட்டுள்ளதாக பா.ஜ.க. குற்றஞ்சாட்டி வருகிறது.

### நெல் கொள்முதல் விவகாரத்தில் தவறான தகவல்:

# எடப்பாடி பழனிசாமி, அன்புமணிக்கு அமைச்சர் அர.சக்கரபாணி விளக்கம்

**சென்னை, நவ. 01-**

நெல் கொள்முதல் விவகாரத்தில் தவறான தகவல் தெரிவித்த எடப்பாடி பழனிசாமிக்கு அமைச்சர் அர.சக்கரபாணி பதில் அளித்துள்ளார்.

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது;- எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அரைத்த மாவையே அரைத்துக் கொண்டு உண்மையை மறைத்து தவறான தகவலைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு ஆண்டும் சட்டமன்றக் கூட்டத்தொடரில் அந்த ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பில் அந்த நடப்புக் கொள்முதல் பருவத்தில் மார்ச் 31 வரை நடைபெற்ற கொள்முதல் விவரம் மட்டுமே குறிப்பிடப்படும். சட்டமன்றத்தில் கொள்கை விளக்கக் குறிப்பு வைக்கப்பட்ட பின்பு அதாவது ஏப்ரல் 1-ம் தேதியிலிருந்து அந்த நடப்பு கொள்முதல் பருவம் முடிவடையும் நாளான 31/08 வரை கொள்முதல் நடைபெறும்.

அதற்கான புள்ளி விவரம் அந்தக் கொள்முதல் குறிப்பில் இடம்பெறாது. இந்த சாதாரண விஷயத்தைக்கூட புரிந்து கொள்ளாமல் முதல்வர் பொய் சொல்கிறார் என்று எதிர்கட்சித் தலைவராக இருப்பவர் தனக்கு யாரோ ஒருவரால் கொடுக்கப்பட்ட புள்ளிவிவரத்தைக் கூட சரிபார்க்காமல் வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று பேசி வருகிறார்.

2024 – 2025-ம் ஆண்டு 3774 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 4799185 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு 514470 விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்ட தொகை ரூபாய் 11697.55 கோடி. 2025 – 2026-ம் ஆண்டு (01.09.2025 முதல் 30.10.2025 வரை) 1892 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 159084 விவசாயிகளிட மிருந்து 1,17,7708 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்ட தொகை ரூபாய் 2840.25 கோடி. ஆக மொத்தம் கழக ஆட்சிக் காலத்தில் 1.96 கோடி மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட புள்ளிவிவரத்தையும் அவர் கொடுக்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்புகளையும் நன்றாக பார்த்து, இனிமேலாவது இதுபோன்று உண்மைக்குப் புறம்பாக சொல்வதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

இதேபோன்று மற்றொரு தவறான தகவலை ஏற்கனவே சொல்லி இருக்கிறார். அதாவது செறிவூட்டப்பட்ட அரிசி தொடர்பாக மத்திய அரசு ஆகஸ்ட் 18 அன்று அனுமதி வழங்கியதாக எதிர்க்கட்சித் தலைவர் கூறியிருந்தார். அதேபோன்று அவருடன் உணவு அமைச்சராக இருந்தவரும் அதே பல்லவியைப் பாடினார். டாக்டர் அன்புமணி ராமதாசும் அதையே சொன்னார். ஆனால் (30.10.2025) நான் மத்திய நுகர்வோர் பாதுகாப்பு, உணவு மற்றும் பொது விநியோகத்திட்டம் மற்றும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷியை நேரில் சந்தித்து 2025 – 26 ஆம் ஆண்டிற்கான செறிவூட்டப்பட்ட அரிசிக்கான சோதனைத் தரச் சான்றினை விரைந்து வழங்கிட வேண்டுகோள் வைத்துள்ளேன்.

இந்நிலையில் மோந்தா புயலின் காரணமாக கொள்முதல் பணிகளில் இடையூறு ஏற்பட்டது. தற்போது புயல் கரையைக் கடந்து இயல்பு நிலை திரும்பிய நிலையில் கொள்முதல் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

இந்த உண்மைகளை எல்லாம் புரிந்து கொள்ளாமல் எதிர்க்கட்சித் தலைவரும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் போன்றவர்களும் தேவையற்ற வகையில் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைச் சுமத்தாமல் இருக்க கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ராமநாதபுரத்தில் மாவட்ட அளவிலான கலை திருவிழா: அமைச்சர் ராஜகண்ணப்பன் தொடங்கி வைத்து சிறப்புரை




**ராமநாதபுரம், நவ. 01-**

ராமநாதபுரத்தில் நடைபெற்ற மாவட்ட அளவிலான கலைத்திருவிழாவை அமைச்சர் ராஜகண்ணப்பன் தொடங்கி வைத்து மாணவ மாணவிகள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி சாதனையாளர்களாக வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார்.

ராமநாதபுரம் கலெக்டர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள முஹம்மது சதக் தஸ்தகீர் கல்வியில் கல்லூரியில் பள்ளிக்கல்வித்துறையில் மாவட்ட அளவிலான கலைத்திருவிழா-2025 துவக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், திருவாடானை சட்டமன்ற உறுப்பினர் ராம.கருமாணிக்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில், வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் தலைமை வகித்து மாவட்ட அளவிலான கலைத் திருவிழாவினை துவக்கி வைத்து பேசியதாவது:- தமிழ்நாடு முதலமைச்சர் பள்ளிக்கல்வித்துறை மற்றும் உயர்கல்வியை தனது இருகண்களாக நினைத்து அதிகளவில் நிதி ஒதுக்கீடு வழங்கி மாணவ, மாணவிகள் முன்னேற்றம் காண வேண்டும் என்ற நோக்குடன் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். காரணம் ஒவ்வொரு மாணவ, மாணவிக்கும் அவர்கள் வாழ்நாள் முழுவதும் அசைக்க முடியாத சொத்தாக இருந்து வரக்கூடியவை கல்வி ஒன்றுதான். அதை மாணவ, மாணவிகள் உரிய பருவத்திலேயே சரியாகப் பெற்று பயன்பெற வேண்டும் என்பதுதான் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நோக்கமும், எண்ணமும் ஆகும். அந்த வகையில் கல்வியை சிறப்புடன் கற்கும் மாணவ, மாணவிகளுக்கு கல்வியுடன் சேர்ந்து தங்கள் திறமைகளையும் வளர்த்து அதன் மூலமாகவும் தங்கள் சாதனையாளர்களாக வர வேண்டும் என்ற நோக்குடன் தமிழ்நாடு முதலமைச்சர் மாணவ, மாணவிகளுக்கு கலைத் திருவிழா நிகழ்ச்சி நடத்த உத்தரவிட்டு நான்கு ஆண்டுகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதன் அடிப்படையில் இந்தாண்டு கலைத் திருவிழா நிகழ்ச்சி துவக்கப்பட்டுள்ளது. இதன் நோக்கம் மாணவர்களுக்கு கல்வி திறனுடன் சேர்ந்து பிற திறமைகளையும் வளர்க்க வேண்டும் என்பதே ஆகும். அதன்படி ஓவியம், இசை, நுண்கலை, பாடல், நாட்டியம், நாடகம் என 46 வகையான கலைகளை கற்று அதன் மூலம் மாணவ, மாணவிகள் தங்கள் திறன்களை மேம்படுத்தி சாதனையாளர்களாக வரவேண்டும் என்ற நோக்குடன் இவ்விழா நடைபெறுகிறது. இதில் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவிகள் பங்கேற்று பயன்பெறுகின்ற வகையில் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இப்போட்டியில் இந்த ஆண்டு 2212 மாணவ, மாணவிகள் பங்கேற்றுள்ளார்கள். போட்டிகள் நான்கு நாட்கள் நடைபெறுகின்றன. பங்கேற்ற மாணவர்களுக்கு வாழ்த்துக்கள் மேலும் அதிக அளவில் மாணவ, மாணவிகள் பங்கேற்க வேண்டும்.

தற்பொழுது மாவட்ட அளவில் நடைபெறுகின்ற போட்டியில் வெற்றி பெறுபவர்கள் மாநில அளவில் நடைபெறும் போட்டியில் பங்கேற்பார்கள். கலை மற்றும் பண்பாட்டை போற்றி பாதுகாப்பவர்கள் தமிழர்கள் அதை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்ற நல்ல நோக்குடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஆண்டுதோறும் இவ்விழா துவங்கப்பட்டு சிறப்புடன் நடைபெற்று வருகிறது. மாநில அளவில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு கலைச்செல்வன் என்ற விருதும், மாணவிகளுக்கு கலையரசி என்ற விருதும் வழங்கி சிறப்பிக்கப்படுகிறது. இது போன்ற விருதுகளை மாவட்டத்தில் உள்ள மாணவ, மாணவிகள் பங்கேற்று மாநில அளவில் வெற்றி பெற்று மாவட்டத்திற்கு பெருமை தேடித் தர வேண்டும். இவ்வாறு தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) சா.புகாரி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) பிரின்ஸ் ஆரோக்கிய ராஜ், ராமநாதபுரம் நகர் மன்றத்தலைவர் ஆர்.கே.கார்மேகம், நகர் மன்ற துணைத்தலைவர் டி.ஆர்.பிரவீன் தங்கம், மாவட்ட கல்வி அலுவலர்கள் சேதுராமு, ஜெய்சங்கர், ஜெயந்தி, நேர்முக உதவியாளர்கள் முருகேசன், ஆரோக்கியதாஸ், முஹம்மது சதக் தஸ்தகீர் கல்வியியல் முதல்வர் முனைவர். சோமசுந்தரம், முஹம்மது சதக் தஸ்தகீர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி முதல்வர் பரணி, உதவி திட்ட அலுவலர் ஒருங்கிணைந்த பள்ளி கல்வித்துறை முனைவர்.கணேச பாண்டியன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# சேமிப்பையும், சிக்கனத்தையும் வலியுறுத்தி உலக சிக்கன நாள் விழா

**விருதுநகர், நவ. 01-**

சேமிப்பையும், சிக்கனத்தையும் வலியுறுத்தி உலக சிக்கன நாள் விழா கொண்டாடப்படுகிறது. தேவையற்ற செலவுகளைத் தவிர்த்து சிக்கன நடவடிக்கையை நாட்டு மக்கள் கடைபிடித்து, சிக்கனமாக வாழ்ந்து, வீட்டிற்கும், நாட்டிற்கும் பெருமை சேர்ப்பதையே இந்த உலக சிக்கன நாள் வலியுறுத்துகிறது. "சிக்கனம் வீட்டைக் காக்கும் , சேமிப்பு நாட்டைக் காக்கும்" என்ற முது மொழிக்கேற்ப ஒவ்வொரு மனிதனும் தனது உழைப்பால் ஈட்டிய செல்வத்தை தன் குடும்பத்திற்கும், நாட்டிற்கும் பயன்படும் வகையில் சேமிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். எதிர் காலத் தேவைகளைக் கருத்தில் கொண்டு மக்கள் சிக்கனமாக வாழ்ந்து, தங்கள் வருமானத்தின் ஒரு பகுதியை சேமிக்கும் பழக்கத்தினை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

எதிர்கால வாழ்க்கை ஒளிமயமாக திகழ்ந்திட பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு சிறு வயதிலிருந்தே சேமிப்பின் அவசியம் குறித்து எடுத்துரைத்து, சேமிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும். "சிறுதுளி பெருவெள்ளம்" என்பதற்கேற்ப மக்கள் தாங்கள் ஈட்டிய பணத்தை, அஞ்சலகச் சிறுசேமிப்புத் திட்டங்களில் ; முதலீடு செய்வதன் மூலம், சிறுகச் சிறுக சேமிக்கப்படும். அத்தொகை பன்மடங்காகப் பெருகி, எதிர்கால வாழ்க்கைக்கு பாதுகாப்பை அளிக்கும். சேமிப்பு முதல் செலவாக இருக்கட்டும். அது எதிர்காலத் தேவைக்கான முதலீடாகும். இந்த உலக சிக்கன நாளில், மக்கள் அனைவரும் தங்கள் வாழ்வு வளம்பெற, அஞ்சலகங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் சிறுசேமிப்புத் திட்டங்களில் சேர்ந்து பயன்பெற்றிட வேண்டும் என்று மண்டல உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

# நத்தத்தில் பஸ் ஆட்டோ மீது மோதி விபத்து: பெண் பலி, 10 பேர் படுகாயம்




**நத்தம், நவ.01-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே பூதகுடியை சேர்ந்தவர் சந்திரன் (53).இவர் தனது ஆட்டோவில் நேற்று காலை சமுத்திராபட்டியில் இருந்து பள்ளி குழந்தைகள் மற்றும் பயணிகளை ஏற்றிக் கொண்டு நத்தம் நோக்கி வந்து கொண்டிருந்தார். நத்தம்- அம்மன்குளம் பகுதியில் வந்து கொண்டிருந்த போது பின்னால் காரைக்குடியில் இருந்து பழனி நோக்கி சென்ற அரசு பஸ் ஆட்டோ மீது மோதியது. இதில் ஆட்டோ தலைகுப்புற கவிழ்ந்து நொறுங்கியது. இதில் ஆட்டோவில் வந்த மேலூர்-பெரியகற்பூரம்பட்டியை சேர்ந்த நைனம்மாள் (43) என்ற பெண் சம்பவ இடத்திலேயே பலியானார்.மேலும் சமுத்திராபட்டியை சேர்த்த பள்ளி மாணவர்கள் திவ்யா (17), குகன்(16), மௌனிகா(16), சாருமதி(15), பூமிகா(15), ஜோதிகா (15), ரியாராஜ்(15)ஹரிணி(14)மற்றும் சாகுல்அமீது (65) ஆட்டோ டிரைவர் சந்திரன் உள்ளிட்ட 10 பேர் காயமடைந்து நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கபட்டுள்ளனர். இதில் ஆட்டோ டிரைவர் சந்திரன் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனையிலும், படுகாயமடைந்த 6 பேர் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கபட்டுள்ளனர். மேலும் இச்சம்பவம் குறித்து நத்தம் போலீஸ்- இன்ஸ்பெக்டர் சிவராமகிருஷ்ணன், சப்-இன்ஸ்பெக்டர் கிருஷ்ணகுமார் ஆகியோர் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# நிலக்கோட்டையில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம்: தேன்மொழி சேகர் எம்.எல்.ஏ தொடங்கி வைத்தார்




**வத்தலகுண்டு, நவ. 01-**

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை அரசு மேல்நிலை இருபாலர் பள்ளியில் ஏழை எளிய மாணவ மாணவிகள் சுமார் 500க்கும் மேற்பட்டவர்கள் படித்து வருகின்றனர்.மாணவமாணவியர்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்க வேண்டுமென்று நிலக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எஸ். தேன்மொழி சேகர் தனது சட்டமன்ற மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 9 லட்சத்தை ஒதுக்கி கொடுத்து அதற்குரிய பணிகள் நடைபெற்று நிறைவடைந்ததை தொடர்ந்து துவக்க நிகழ்ச்சி நிலக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் தேன்மொழி சேகர் தலைமை தாங்கி குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை தொடங்கி வைத்து சுத்தமான குடிநீரை மாணவ மாணவிகளுக்கு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் ஊராட்சி ஒன்றிய குழு துணைத் தலைவர் யாகப்பன், அ.தி.மு.க. மேற்கு ஒன்றிய செயலாளர் நல்லதம்பி, முன்னாள் திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர் உதயகுமார், நிலக்கோட்டை நகர அ.தி.மு.க. செயலாளர் சேகர், நிலக்கோட்டை ஒன்றிய பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் டாக்டர் செல்வராஜ், ஒன்றிய துணைச் செயலாளர் ஜெயசீலன், இளைஞர் அணி ஒன்றிய நிர்வாகி முனியப்பன், ஜெயலலிதா பேரவை ஒன்றிய செயலாளர் செல்வராஜ், நிலக்கோட்டை நகர அ.தி.மு.க. பொறுப்பாளர் மோகன் குமார், திண்டுக்கல் மாவட்ட செயற்குழு உறுப்பினர் சேசுராஜ், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் வீரமணி ராஜா, நிலக்கோட்டை பேரூராட்சி வார்டு கவுன்சிலர் மீனாட்சி நவநீதன் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர் இளங்கோ குமார், மற்றும் பள்ளி மாணவ மாணவிகள் ஆசிரியர்கள் போடா பலர் கலந்து கொண்டனர்.




**மேலூர் நகராட்சி பகுதியில் உள்ள வார்டுகளில் சிறப்பு கூட்டம் நடைபெற்றது. 26வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் கலைச்செல்வி செந்தில்குமார் என்ற முருகன் தலைமையில் வார்டு சிறப்பு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு நகராட்சி படவரைவாளர் செங்கிஸ்கான் பொதுமக்களிடம் இருந்து மனுவை பெற்றுக்கொண்டார்.**

# நத்தத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாம்




**நத்தம், நவ. 01-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் துரைக்கமலம் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம் நடந்தது.

இதில் பேரூராட்சிக்குட்பட்ட 9வது வார்டு முதல் 18 வது வார்டுகளுக்கு நடந்த முகாமை நத்தம் பேரூராட்சி தலைவர் சேக்சிக்கந்தர்பாட்சா தலைமை தாங்கி மனுக்களை வாங்கி தொடங்கி வைத்தார்.

முன்னாள் எம்.எல்.ஏ ஆண்டிஅம்பலம்,நகர செயலாளர் ராஜ்மோகன்,ஒன்றிய செயலாளர்கள் ரத்தினக்குமார், பழனிச்சாமி,தாசில்தார் ஆறுமுகம்,செயல் அலுவலர் விஜயநாத் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பேரூராட்சி துணை தலைவர் மகேஸ்வரி சரவணன் வரவேற்றார்.இந்த முகாமில் மகளிர் உரிமை தொகை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, சமூகநலத்துறை, வீட்டுவசதி உள்ளிட்ட 13 அரசு துறைகளுக்கு மனுக்கள் பெறப்பட்டது.

இதில் மண்டல துணை வட்டாட்சியர் சுந்தரபாண்டியன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சுந்தரமூர்த்தி உள்ளிட்ட பேரூராட்சி கவுன்சிலர்கள், தி.மு.க. நிர்வாகிகள்.அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர். மேலும் இந்த முகாமில் பெறப்படும் மனுக்களுக்கு 45 நாட்களில் தீர்வு காணப்படும் என்றும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நத்தத்தில் பைக்கில் இருந்து தவறி விழுந்த இளைஞர் பலி

**நத்தம், நவ. 01-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் முஸ்லீம் மேலத்தெருவை சேர்ந்தவர் மைதீன்ஷா(49) இவரது மகன் அன்சாரி(21). இவர் கடந்த 28-ம் தேதி இரவு தனது பைக்கில் கோவில்பட்டிக்கு சென்று விட்டு மீண்டும் வீட்டுக்கு திரும்பி கொண்டிருந்தார். கோவில்பட்டி பஸ் ஸ்டாப் பகுதியில் வந்து கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக கட்டுப்பாட்டை இழந்த பைக் சாலையோரத்தில் கவிழ்ந்தது. இதில் பலத்த காயமடைந்த அன்சாரியை அக்கம் பக்கத்தினர் மீட்டு நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர்.பின்னர் மேல் சிகிச்சைக்காக அவர் மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கபட்டார். ஆனால் அங்கு சிகிச்சை பலனில்லாமல் நேற்று முன்தினம் அன்சாரி இறந்து விட்டார். இச்சம்பவம் குறித்து நத்தம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



**மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே அ.புதுப்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ ராமகிருஷ்ணன் கோயிலில் 48 வது மண்டல பூஜையையொட்டி சிறப்பு யாகம் நடைபெற்றது. தொடர்ந்து அறுசுவை அன்னதானம் நடந்தது , இதற்கான ஏற்பாடுகளை அ.புதுப்பட்டி அகமுடையார் பெருமக்கள், கிராம மக்கள் செய்திருந்தனர்.**

# பெரும்பாறையில் ஆதிவாசிகள் குடியிருக்கும் பகுதியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்



**வத்தலகுண்டு, நவ. 01-**

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் தாலுகா மணலூர் ஊராட்சி பெரும்பாறையில் உள்ள ஆதிவாசிகள் குடியிருக்கும் பகுதியான குத்துக்காடு என்னும் இடத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடந்தது.

மணலூர் கிராம நிர்வாக அலுவலர் முருகன் அனைவரையும் வரவேற்றார். முகாமுக்கு தி.மு.க. மேற்கு ஒன்றிய செயலாளர் ராமன் தலைமை தாங்கி பேசினார். இதில் வருவாய்த்துறை, சுகாதாரத்துறை, மாற்றுத்திறனாளிகள் துறை உள்ளிட்ட 15 அரசுத்துறை அதிகாரிகள், அலுவலர்கள் கலந்து கொண்டு மக்களிடம் இருந்து பெற்ற மகளிர் உதவித்தொகை, வீட்டுமனை பட்டா, ரேஷன் கார்டு உள்ளிட்ட மனுக்களை உடனுக்குடன் ஆன்லைனில் பதிவேற்றம் செய்தனர்.

முகாமில் ஆத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் முருகன், பத்மாவதி, துணை வட்டாரவளர்ச்சி அலுவலர் சுரேஷ், தி.மு.க.மாவட்டஅவைத்தலைவர் காணிக்கைசாமி, முன்னாள்துணைச்சேர்மன் ஹேமலதா மணிகண்டன், மாவட்ட இளைஞர்அணிதுணைஅமைப்பாளர்மணிகண்டன், சுருளிராஜன், ஜெயராஜி, செல்வகுமார் மணலூர் ஊராட்சி செயலர் திருப்பதி, துணை தாசில்தார்கள் அந்தோணி, அபிராமி, வருவாய் ஆய்வாளர் சாந்தி,

கிராமநிர்வாக அலுவலர்கள் முருகன். பாண்டியராஜன், முத்து காமாட்சி, சரவணன், காளிதாஸ் மற்றும் அரசு அலுவலர்கள் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் முகாமில் கலந்து கொண்டனர். முகாமில் 388 மனுக்கள் பெறப்பட்டன. சில மனுக்களுக்கு உடனடி தீர்வு காணப்பட்டது. ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர். முகாமிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து, முகாமின் முடிவில் மணலூர் ஊராட்சி செயலர் திருப்பதி நன்றி கூறினார்.

## ஜெயந்தி விழா: பசும்பொன்னில் உள்ள தேவர் சிலைக்கு

# தென்னிந்திய பார்வர்டு பிளாக் கட்சி நிறுவனத்தலைவர் கே.சி.திருமாறன் ஜி மாலை அணிவித்து மரியாதை



**மதுரை, நவ. 01-**

பசும்பொன் முத்துராமலிங்க தேவர் ஜெயந்தி விழாவை முன்னிட்டு தென்னிந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் நிறுவனத் தலைவர் கே.சி.திருமாறன் ஜி பசும்பொன்னில் உள்ள தேவர்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். தென்னிந்திய பார்வர்டு பிளாக் கட்சி சார்பாக பசும்பொன் கிராமத்தில் இருக்கக் கூடிய பசும்பொன் ஆலயத்தில் நிறுவனத் தலைவர் கே.சி.திருமாறன் ஜி தேவர் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். இதற்காக மதுரையில் இருந்து 150 வாகனம் மூலம் சென்றனர். இதில் மாநில பொதுச் செயலாளர் சபரி, மாநில தலைவர் ராஜேஷ், மாநில துணைப் பொதுச் செயலாளர் ஐயர் தேவர், மாநில துணைத்தலைவர் பிரதீப், மதுரை மாவட்ட தேர்தல் பொறுப்பாளர் மருது ஆனந்த், தேனி மாவட்ட கோட்ட பொறுப்பாளர் தெய்வம், இளைஞரணி மாநில தலைவர் ஆனந்த், தொண்டரணி மாநில பொதுச் செயலாளர் செல்வகுமார், வானிலை இளைஞரணி அமைப்பாளர் டைகர் விஜி, மாநில மகளிர் அணி அவைத்தலைவர் ஜீவா சித்தப்பாண்டி, மாநில மகளிர் அணி தலைவி தெய்வ சக்தி மற்றும் ராமநாதபுரம் மாவட்ட தலைவர் உச்ச புலி சசி முருகானந்தம் போன்ற பல்வேறு பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

## சிவகாசி அருகே

# வெடித்து சிதறிய பட்டாசு கழிவுகளால் 5 கிலோ மீட்டர் சுற்றளவிற்கு அதிர்வு

**சிவகாசி, நவ. 01-**

சிவகாசி அருகே மீனம்பட்டி நாரணாபுரம் சாலை ஓரமாக கொட்டப்பட்ட பட்டாசு கழிவுகள் பயங்கர சப்தத்துடன் வெடித்து சிதறியது. இதன் காரணமாக சுமார் 5 கிலோமீட்டர் தூரத்திற்கு அதிர்வு ஏற்பட்டதால் மக்கள் பீதியடைந்தனர். பட்டாசு கழிவுகள் வெடித்து சிதறிய போது சாலையை யாரும் கடக்காததால் நல்வாய்ப்பாக பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. சம்பவம் அறிந்து வந்த சிவகாசி தீயணைப்பு துறையினர் நீண்ட நேரம் போராடி தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். இச்சம்பவம் குறித்து சிவகாசி கிழக்கு காவல் நிலைய போலீசார் நடத்திய விசாரணையில், சட்டவிரோதமாக பட்டாசு தயாரிக்கும் சிலர் சாலையோரம் பட்டாசு கழிவுகளை கொட்டி இருக்கலாம் என சந்தேகிக்கின்றனர். மேலும் பொது மக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் பொது இடங்களில் பட்டாசு கழிவுகள் கொட்டப்படுவதை தடுக்க தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



சென்னையில் நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவரது முகாம் அலுவலகத்தில் தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் முன்னாள் துணைத்தலைவர் கோ.பழனி - ப.அஞ்சுகம் தம்பதியரின் மகன் ப.அக்னீஸ்-வி.எஸ்.ஜிஷா ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். இம்மணவிழாவில் சட்டமன்ற உறுப்பினர் க.பொன்முடி மற்றும் பொன்.கௌதமசிகாமணி, ரவிச்சந்திரன், லூயிஸ், மணமக்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

### வரும் 2026 சட்டசபை தேர்தல் குறித்து

# பொள்ளாச்சி, திருச்செங்கோடு தி.மு.க. நிர்வாகிகளுடன் முதல்வர் ஆலோசனை

சென்னை, நவ. 01-

வரும் 2026-ம் ஆண்டு சட்டசபை தேர்தல் குறித்து சென்னை அண்ணா அறிவாலயத்தில் பொள்ளாச்சி மற்றும் திருச்செங்கோடு சட்டமன்ற தொகுதி தி.மு.க. நிர்வாகிகளுடன் தி.மு.க. தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் நேற்று ஆலோசனை நடத்தினார்.

தமிழகத்தில் அடுத்த ஆண்டு சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் அரசியல் கட்சிகள் தேர்தல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றன. பிரசாரம், பொதுக்கூட்டம், நலத்திட்டப்பணிகள், கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை என பல்வேறு நடவடிக்கைகளை அரசியல் கட்சிகள் மேற்கொண்டு வருகின்றன.

இந்நிலையில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் கட்சி நிர்வாகிகளுடன் தி.மு.க. தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் நேற்று ஆலோசனை நடத்தினார். பொள்ளாச்சி மற்றும் திருச்செங்கோடு சட்டமன்ற தொகுதி தி.மு.க. நிர்வாகிகளுடன் முதல்வர் அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை நடத்தினார்.

ஒன் டு ஒன் முறையில் இந்த ஆலோசனை நடைபெற்றது. இந்த ஆலோசனையின்போது தொகுதியில் கட்சி செயல்பாடுகள், களநிலவரம் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து நிர்வாகிகளுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை நடத்தினார். முதல்வர் மு.க.ஸ்டாலின் 31 நாட்களில் 69 சட்டமன்ற தொகுதி தி.மு.க. நிர்வாகிகளை சந்தித்து ஆலோசனை நடத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் வருகிறது போர்டு நிறுவனம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு

சென்னை, நவ. 01-

முழு ஆற்றலுடன் சென்னைக்கு மீண்டும் போர்டு நிறுவனம் வரவுள்ளதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

உலகில் போர், பொருளாதார நெருக்கடிகள் என எண்ணற்ற அரசியல் நிலையற்ற சூழல்கள் நிலவி வந்தாலும், முதல்வரின் அமெரிக்க பயணம் போர்டு தொழிற்சாலையை மீண்டும் தமிழ்நாட்டிற்கு கொண்டு வந்திருக்கிறது. இந்த உலகளாவிய நிறுவனத்தின் மூலம் கூடுதல் முதலீடுகளும், வேலைவாய்ப்பும் கிடைக்க இருக்கிறது என அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா கூறியுள்ளார். இந்தநிலையில், முழு ஆற்றலுடன் சென்னைக்கு மீண்டும் வருகிறது போர்டு நிறுவனம் என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் எக்ஸ் தளத்தில் பதிவிட்ட பதிவில், முழு ஆற்றலுடன் சென்னைக்கு மீண்டும் வருகிறது போர்டு நிறுவனம் போர்டு நிறுவனம் 3,250 கோடி ரூபாய் முதலீட்டில் அடுத்த தலைமுறை வாகன இஞ்சின் உற்பத்தி அலகைத் தனது மறைமலை நகர் தொழிற்சாலையில் அமைக்கவுள்ளது. மிக நீண்ட, நம்பிக்கை கொண்ட உறவினைப் புதுப்பிக்கும் வகையில் இந்த ஆற்றல்மிகு மீள்வருகை அமைந்துள்ளது. இந்த முக்கிய முதலீட்டினால் 600 நேரடி வேலைவாய்ப்புகள் உருவாவதோடு, தமிழ்நாட்டின் ஆட்டோமொபைல் உதிரி பாகச் சூழலும் வலுவடையும்.

அடுத்த தலைமுறை இஞ்சின்களை உற்பத்தி செய்ய இந்தியாவின் ஆட்டோமொபைல் தலைநகரத்தைத் தேர்வு செய்துள்ள போர்டின் முடிவானது, தமிழ்நாட்டின் தொழில்துறை வலிமைக்கும் உலக உற்பத்திச் சங்கிலியில் நமது தவிர்க்க முடியாத இடத்துக்கும் மற்றுமொரு சான்றாக உள்ளது! தங்கள் மீள்வரவு நல்வரவாகட்டும் என அதில் பதிவிட்டுள்ளார்.




சென்னையில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட அளவிலான கார்பன் நீக்கத்திட்டங்களுடன் மாநில அளவிலான காலநிலை நடவடிக்கை கண்காணிப்பு திட்டத்தை அமைச்சர் தங்கம் தென்னரசு அறிமுகப்படுத்தினார். இந்நிகழ்ச்சியில் காலநிலை மாற்ற ஆட்சி மாற்றக்குழு உறுப்பினர் மான்டெக்சிங் அலுவாலியா, கூடுதல் தலைமைச்செயலாளர் சுப்ரியாசாகு, முதன்மைச்செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு உள்ளனர்.



சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியனை மேற்கு ஆஸ்திரேலியாவின் வர்த்தகத்துறை அமைச்சர் டோனி புட்டி மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசினார். இதில் உயர்கல்வித்துறை செயலாளர் பொ.சங்கர், சென்னைக்கான ஆஸ்திரேலிய துணை தூதர் சிளை ஜக்கி, மேற்கு ஆஸ்திரேலியாவின் வர்த்தக ஆணையர் இயன் மார்டினஸ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



சென்னை வர்த்தக மையத்தில் மத்திய நுகர்வோர் பாதுகாப்பு, உணவு, பொது விநியோக திட்டம், புதிய, புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷியை உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி சந்தித்து தமிழ்நாட்டில் நெல் ஈரப்பதத்தை 17 சதவீதத்திலிருந்து 22 சதவீதமாக உயர்த்தி கொள்முதல் செய்திட அனுமதி வழங்கவும், செறிவூட்டப்பட்ட அரிசியை சோதனை செய்து தரச்சான்றினை விரைந்து வழங்கிட ஆவன செய்திடவும் கோரிக்கை மனுவை வழங்கினார்.



ஓமலூரில் உள்ள சேலம் புறநகர் மாவட்ட அலுவலகத்தில் நேற்று வளர்ச்சிப்பணிகள் குறித்து மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூராட்சி செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் செயலாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகளுக்கு அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி ஆலோசனை வழங்கி பேசினார். இதில் அமைப்புச்செயலாளர் செம்மலை, சேலம் புறநகர் மாவட்ட செயலாளர் இளங்கோவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அ.தி.மு.க.வில் இருந்து செங்கோட்டையன் நீக்கம்

## எடப்பாடி பழனிசாமி உத்தரவு

சேலம், நவ. 01-

அ.தி.மு.க.வில் இருந்து செங்கோட்டையனை நீக்கி எடப்பாடி பழனிசாமி உத்தரவிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற முத்துராமலிங்க தேவரின் குருபூஜையில் ஓ.பன்னீர் செல்வம், டிடிவி தினகரன் மற்றும் செங்கோட்டையன் ஆகியோர் ஒன்றாக கலந்து கொண்டனர்.

இதையடுத்து செய்தியாளர்களை சந்தித்த செங்கோட்டையன், 'அ.தி.மு.க.வில் இருந்து என்னை நீக்கினால் மகிழ்ச்சிதான்' என்றும் தெரிவித்து இருந்தார். இந்த சூழலில், சேலத்தில் முக்கிய நிர்வாகிகளை நேற்று எடப்பாடி பழனிசாமி சந்தித்தார். இந்த சந்திப்பை தொடர்ந்து, அ.தி.மு.க.வில் இருந்து செங்கோட்டையன் நீக்கப்படுவதாக அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது;-

அ.தி.மு.க.வின் கொள்கை-குறிக்கோள்களுக்கும் கோட்பாடுகளுக்கும் முரணான வகையில் செயல்பட்டதாலும்; கழகத்தின் சட்ட திட்டங்களுக்கு மாறுபட்டு, கழகத்தின் ஒழுங்குமுறை குலையும் வகையில் நடந்து கொண்டதாலும்; கழகத்தில் இருப்பவர்கள், கட்சியில் இருந்து நீக்கப்பட்டவர்களுடன் எவ்விதத் தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாது என்பது தெரிந்திருந்தும், அவர்களுடன் ஒன்றிணைந்து, கழகத்தின் கண்ணியத்திற்கு மாசு ஏற்படும் வகையில், கழகக் கட்டுப்பாட்டை மீறி கழகத்திற்கு களங்கமும் அவப்பெயரும் உண்டாகும் விதத்தில் தொடர்ந்து செயல்பட்டு வருகின்ற காரணத்தினாலும், ஈரோடு புறநகர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த கே.ஏ.செங்கோட்டையன், எம்.எல்.ஏ., (கோபிசெட்டிபாளையம் சட்டமன்றத் தொகுதி) நேற்று முதல் கழகத்தின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பு உட்பட அனைத்துப் பொறுப்புகளில் இருந்தும் நீக்கி வைக்கப்படுகிறார்.கழக உடன்பிறப்புகள் யாரும் இவருடன் எவ்விதத் தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாது என கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, அ.தி.மு.க.வை ஒன்றிணைக்க எடப்பாடி பழனிசாமிக்கு செங்கோட்டையன் 10 நாட்கள் கெடு விதித்ததற்காக அவரை கட்சி பொறுப்பில் இருந்து எடப்பாடி பழனிசாமி விடுவித்து இருந்தது குறிப்பிடத்தக்கது.

# ஆதார், ஜி.எஸ்.டி. நடைமுறையில்... (1-ம் பக்க தொடர்ச்சி)

அல்லது கருவிழி ஸ்கேன்கள் போன்ற பயோமெட்ரிக் புதுப்பித்தல்களுக்கு, ஒரு நேரடி ஆதார் மையத்திற்குச் செல்ல வேண்டியது இன்னும் அவசியமாகும்.

புதிய கட்டண அமைப்பின்படி, பயோமெட்ரிக் அல்லாத புதுப்பித்தல்களுக்கு ரூ.75-ம், பயோமெட்ரிக் புதுப்பித்தல்களுக்கு ரூ.125-ம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஓய்வூதியதாரர்களுக்கு தொடர்ந்து தடையின்றி ஓய்வூதியம் பெற, ஓய்வு பெற்றவர்கள் இன்று முதல் 30 வரை தங்கள் வருடாந்திர வாழ்நாள் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும். மேலும் அரசு ஊழியர்களுக்கு தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் (என்.பி.எஸ்.) இருந்து ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்திற்கு (யு.பி.எஸ்.) மாறுவதற்கான காலக்கெடு நவம்பர் 30-ந் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

புதிய சரக்கு மற்றும் சேவை வரி (ஜி.எஸ்.டி) பதிவு முறை இன்று முதல் நடைமுறைக்கு வருகிறது.

இது பதிவு செயல்முறையை எளிதாக்குவதற்கும், சிறு வணிகங்கள் இணங்குவதைச் சுலபமாக்குவதற்கும் வடிவமைக்கப்பட்டுள்ளது.




சீனாவில் நடைபெற்ற பேட்மிண்டன் ஆசிய ஜூனியர் சாம்பியன்ஷிப் போட்டியில் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் முதல் தங்கப்பதக்கத்தை வென்று வரலாற்று சாதனை படைத்துள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சாம்பியன்ஸ் மேம்பாட்டுத்திட்ட திருவள்ளூர் மாவட்ட வீராங்கனை எஸ்.ஆர்.தீக்ஷாவுக்கு நேற்று வாழ்த்து தெரிவித்து ரூ.5லட்சத்திற்கான ஊக்கத்தொகை காசோலையை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.



சென்னை மாநகராட்சி ராயபுரம் 5-வது மண்டல அலுவலக கூட்டரங்கில் நேற்று அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து வளர்ச்சி திட்டப்பணிகளின் முன்னேற்றங்கள் குறித்தும், வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மேயர் ஆர்.பிரியா, துணை ஆணையாளர் கட்டா ரவிதேஜா, மண்டலக்குழு தலைவர் பிஸ்ரீராமுலு, மண்டல அலுவலர் விஜய்பாபு ஆகியோர் கலந்து கொண்டனர்.